

# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம்.    www.thennadu.org

வள்ளுவர் ஆண்டு 2053  சுறவம் நல்லோரை தைத் திங்கள் 11ம் நாள் அன்று (25 -01-2024 வியாழக்கிழமை)  வெளியீடு +94 21 222 9722


## பொங்குவோம் பொங்கவைப்போம்

ஒசுத்திரேலியா அறம் அறக்கட்டளையின் பொங்குவோம் பொங்கவைப்போம் செயற் திட்டத்தில் மட்டக் களப்பு, பொலனறுவை மாவட்டங்களில் 450 குடும்பங்களுக்கு பொங் கல் பானைகள் மற்றும் பொதிகள் வழங்கப் பட்டன.





**நயினையம்பதியில் பெருஞ்சாந்தி**

**நாகபூசனிக்குப்  பெருஞ்சாந்தி**

**அன்னை அம்பாளுக்குப் பெருஞ்சாந்தி**

**அருள்வாய் தாயே நாகபூசனியே**

**நயினை நாகபூசனி அம்மன்**

**திருக்குடமுழுக்கு சிறப்பிதழ்**

**(தைத்திங்கள் 10ம் நாள்)**


# நயினையம்பதி நாகபூசனி அம்மன் திருகுடநீராட்டிற்கு செங்கோல் ஆதீனம் இலங்கை வருகை



நயினை நாகபூசனி அம்மன் கடவுள் மங்கல நன்னீராட்டில் கலந்து கொள்ள செங்கோல் ஆதீனம் 103 வது சந்நிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக சத்திஞான பரமச்சாரிய சுவாமிகள் இலங்கை வருகை தந்தார்கள். நேரடியாக அயோத்தியில் இருந்து அதாவது இராமர் பிறந்த ஊரில் இருந்து இராவணன் பிறந்த ஊருக்கு வருகை தந்து, நயினை அம்பாளின் திருக்கூட நன்னீராட்டில் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

# தென்னாட்டில் இராவணனுக்கு அருள்நீர் வழிபாடு





இராமர் பிறந்த பூமி அயோத்தியில் இராமபிரானுக்கு கோயில் கட்டி குடமுழுக்கு செய்த அதே வேளையில், தைத்திங்கள் 8ம் நாள் மதியம் 12.20 இற்கும்12.45 இடைப்பட்ட நேரத்தில், தென்னாடு ஐம்பூதநாதருக்கும், இலங்கை மன்னன் இராவணனுக்கும், இராவணன் பிறந்த பூமி இலங்கையில் தென்னாட்டில் சிறப்பு நீராட்டு மற்றும் பூசைகள் நடைபெற்றன. சைவமும் தமிழும் மேலும் ஆண்டாண்டு காலம் இந்த மண்ணில் வளர வேண்டி இந்த சிறப்பு நீராட்டு மற்றும் பூசைகள் இடம்பெற்றன.

# வரலாற்றுப் பிழை வந்துவிடக்கூடாது என்று சிட்னியில் மக்கள் கவனஈர்ப்பு



**மொய் தார் அணிகுழல் வள்ளியை வேட்டவன், முத்தமிழால்**
**வைதாரையும் ஆங்கு வாழவைப்போன், வெய்ய வாரணம்போல்**
**கைதான் இருபது உடையான் தலைப் பத்தும் கத்தரிக்க**
**எய்தான் மருகன், உமையாள் பயந்த இலஞ்சியமே** - கந்தர் அலங்காரம்

சிட்னி முருகன் திருக்கோயிலின் மூன்றாவது கடவுள் மங்கல நன்னீராட்டு விழா கடந்த தைத்திங்கள் 8ம் நாள் சிட்னியில் சிறப்பாக நடைபெற்றது.

இந்த பெருஞ்சாந்தியினை கடந்த முறை அதாவது 2012ம் ஆண்டு தைத்திங்கள் 15ம் நாள் (29-01-2012) நடைபெற்றது போல் இம்முறையும் அருட்குருநாதர் சத்தியவேல் முருகன் ஐயா அவர்கள் வரவழைக்கப்பட்டு, தமிழிலும் கிரிகைகள் நடைபெறவேண்டும் என்று சிவத்திரு.குணரத்தினம் பார்த்தீபனால் (தென்னாடு நிறுவுனர், ஒசுத்திரேலியா அறம் அறக்கட்டளை செயலாளர்) போதுமான கால இடைவெளியில் சிட்னி சைவ மன்ற தலைவரிடம் விண்ணப்பம் செய்யப்பட்டது. (3/10/2023 8:56 மின்னஞ்சல்) பின்னர் செயற்குழு அங்கீகரிக்கவில்லை என்று கைபேசி ஊடக தகவல் கொடுக்கப்பட்டது. 2012ம் ஆண்டு நடைபெற்ற இந்த தமிழ் திருக்குட நன்னீராட்டு இம்முறை நிறுத்தப்பட்ட வரலாற்றுப் பிழையை சிட்னி மக்களுக்கு வெளிக்கொணரவேண்டும் மற்றும் வரலாற்றில் பதியவேண்டும் என்று சிவத்திரு.பார்த்தீபன் அவர்கள் ஒரு காணொளிப் பதிவினை வெளியிட்டிருந்தார். மற்றும் பல தமிழ் அமைப்புகள் குறிப்பாக சிட்னி தமிழ் மன்றத்தினரும் தங்கள் விண்ணப்பத்தினை விடுத்திருந்த போதும், நிர்வாகம் அதனை பொருட்படுத்தவில்லை என்று பல விழிப்புணர்வுகள் மற்றும் திருக்குட முழுக்கு தினத்தில் கோயிலின் முன் அமைதியான முறையில் தங்கள் ஆதங்கத்தினை வெளிப்படுத்தியிருந்தனர். இப்படியான வரலாற்று பிழைகள் இனி வருங்காலத்தில் நடக்கவிடாமல் இருக்க இளம் பத்தர்கள் திடமான சித்தாந்தந்ததுடன் செயற்படவேண்டும்.



தென்னாடு

www.thennadu.org





**சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன்**
தலைமை ஆசிரியர் – தென்னாடு,
+6149949 3300, thennavan@thennadu.org


# தோன்றிய நோக்கங்கள் துலங்குமா தொலையுமா

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு - (குறள் - 423)**

**எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு - திருக்குறள் 355**

தமிழர் மரபில் கருவிலே திருவானவர்கள்,பற்பல ஞானிகள், நாயன்மார்கள், ஆழ்வார்கள், சந்தான குரவர்கள், சங்கம் வளர்த்தவர்கள், பெருமன்னர்கள், பெருந்தச்சர்கள் என்று பலர் தோன்றி பல திருவருட்துணையோடு, ஆழமான சிந்தனைகளின் வழி சைவத்திற்கும், தமிழுக்கும் பலதொண்டுகளை ஆற்றி யது மட்டுமல்ல கருத்துகள், இலக்கியங்கள்,இலக்கணங்கள், திரு முறைகள், பாசுரங்கள், சித்தாந்தங்கள் எனப் பலவற்றை விட்டுச்சென்றுள்ள னர்.

மேலாக அவற்றினை எதிர்காலச் சந்ததியினருக்கு ஊடுகடத்த வேண்டுமென பலவகையான சங்கங்களை வகுத்துள்ளனர். இதன்வழியே கோயில்கள், ஆதீனங்கள், மடங்கள், சமய நிறுவனங்கள், சங்கங்கள், பள்ளிகள், சந்தானமரபின்வழி வரும் அறிஞர்கள், சிந்தனையாளர்கள் என்று நீளும்.இப்படியான பொதுநோக்குடன், அரசு மற்றும் பொதுமக்கள் பணத்தில் தொடங்கிய நிறுவனங்களும், அதனை நிர்வகிப்பவர்களும் தோன்றிய நோக்கங்களுன் நிற்கின்றார்களா இல்லை பொறிவாயில் அகப்பட்டு ஐந்தவிக்கிறார்களா என்று மக்கள் சிந்திக்கவேண்டும்.

பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே என்று நன்னூல் வழி சிந்திக்கவும் வேண்டும் என்ற சிந்தனை வரும். அதில் தவறில்லை ஆனால் கொள்கைவழி, சந்தான அறிவுவழி நின்று கொண்டு உலகமாற்றத்திற்கு ஈடு கொடுத்தலே அடிப்படை. உதாரணமாக கோயிலைத் தொடங்கிவிட்டு, காலம் மாறுகிறது, அங்கே வரும் மக்களின் இனம் மாறுகிறது, அவர்களால் தான் கோயிலுக்கு வருவாய் வருகிறது, அங்கே வேலைக்கு இருக்கும் பூசகர்கள் விரும்பவில்லை என்பதற்காக, கோயில் தொடங்கிய நோக்கத்தினை விட்டு இயங்குவது சரியா என்று சிந்திக்க வேண்டும்.

எங்கள் முன்னோர்கள், சிலவற்றை ஆழமாகச் சிந்தித்து, எதிர்கால போக்குகளை உணர்ந்து நோக்கங்களை முன்வைத்து, நிறுவனங்களை உருவாக்கியுள்ளனர். அவற்றினை அந்த நோக்கங்களின் வழி எடுத்துச் செல்வதே அறிவார்ந்தவர்களின் பங்கு.

ஆகவே பண்பாட்டை, சமூகத்தினை வளர்க்க விளையும் தலைமையாளர்கள், சந்தானமரபினர், சமயவாதிகள், சமுகத் தலைவர்கள் மற்றும் நிறுவனங்கள் இதனை ஆழமாக சிந்தித்து செயற்படவேண்டும். இல்லையேல் எங்கள் முன்னோர்களின் பிதிர் சாபத்திற்கு உட்படுவார்களா என்று எண்ணத் தோன்றுகிறது.

கடந்த வருடம் ஐப்பசி இதழில் வெளிவந்த செய்தியின் மீள்பதிவு.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.**

# சிட்னியில் வீதியில் நடந்த மாபெரும் பொங்கல்



ஒசுத்திரேலியா சிட்னி நகரில், தமிழர்கள் செறிந்து வாழும் பகுதியான பென்டில் கில் நகரத்தில் தைத்திங்கள் 7ம் நாள் (21-1-2024) ஞாயிற்றுக் கிழமை எண்பதிற்கும் மேற்பட்ட தமிழ் அமைப்புகளும், வர்த்தக நிறுவ னங்களும் ஒன்றிணைந்து, ஒருமித்த தமிழர் பொங்கலாக 60 பானைகளில் வீதியிலே பொங்கிப் படைத்தனர்.

மூவாயிரத்திற்கும் மேற்பட்ட தமி ழர்கள் இந்தப் பெருவிழாவில் பங்கு பற்றினர். இயல்,இசை, நாடகம் என்று முத்தமிழையும் எடுத்தியம்பும் நிகழ்ச்சி கள் விழாவிற்கு மேலும் மெருகூட்டின. தமிழர் மரபுத் திங்களாக தை மாதத் தினை, தமிழர் திருநாளாக கொண் டாடவேண்டும் என்ற செய்தி சிட்னி யிலும் ஓங்கி ஒலித்தது. தமிழர் வருடப்பிறப்பு, தை இல்லை என்ற கருத்தும் விழா ஒருங்கிணைப்பாளர் களிடையே ஆழமாய் இருந்தது அவர்களின் செவ்விகள் மற்றும் செயற்பாடுகளில் வெளிப்பட்டன. மற்றும் தமிழர் மரபுத்திங்கள், தமிழர் திருநாள், தைப் பொங்கல் என்று முழங்கும் இவர்கள் தமிழை, தூய கலப்படம் அல்லாத தமிழாக பாவித்திருந்தமை, கொள்கையின் ஆழத்தை மேலும் பறைசாற்றியது.

இந்த விழாவில் பல அரசியல் வாதிகளும், முக்கிய பிரமுகர்களும் கலந்துகொண்டனர். காலை 6.30 மணியளவில் தொடங்கிய விழா மதியம் ஒரு மணியளவில் நிறைவ டைந்தது.








# தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமட சைவ மாணவர் சபை நடாத்திய
# ‘மார்கழிப் பெருவிழா - 2023’





# தென்னாடு

www.thennadu.org




**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 671 6678 | nilavan@thennadu.org


## தென்னாட்டு நிறைமதி அறிக்கை

(18-12-2023) – தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் சைவ மாணவர் சபையினருக்கும் வடமாகணத்தின் கல்வி வலயத்திற்குட்பட்ட இந்து சமய பாட ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் இந்து சமய பாட இணைப்பாளர்களுக்குமான கலந்துரையாடல் யாழ் வலயக் கல்வி அலுவலகத்தில் இடம்பெற்றது.

(24-12-2023) – தென்னாடு திங்கள் இதழின் நாற்பதாவது இதழ் வெளியீடு கடந்த மார்கழித் திங்கள் 9ம் நாள் அன்று (24-12-2023 ஞாயிற்றுக்கிழமை) தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் தமிழ்நாடு அரன்பணி அறக்கட்டளையின் தலைவர் சிவ. பவானி அ. தியாகராசன் ஐயா அவர்கள் இதழை வெளியீட்டு வைத்தார். மேலும் சிவத்திரு.நடராஜா இராஜ்குமார் (தலைமை நிர்வாக அதிகாரி – கென்ட் டவர் நிறுவனம், கொழும்பு), மதிக்கலர்ஸ் அச்சகத்தின் உரிமையாளர் சதீஷ் மற்றும் அரன்பணி அறக்கட்டளையை சார்ந்த அடியார்கள் பலரும் கலந்து சிறப்பித்திருந்தார்.

(25-12-2023) – தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமட சைவ மாணவர் சபையின் 2023ம் ஆண்டிற்கான மார்கழிப் பெருவிழா, யாழ்ப்பாணம் நீராவியடி இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வானது காலை 8 மணியளவில் யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை மங்களநாதர் திருக்கோயிலில் வழிபாட்டுடன் ஆரம்பமாகி, நால்வர் பெருமக்களுடன் திருமுறைகள் திருவீதி உலாவாக எழுந்தருளஞுடன், இரண்டு அரங்கங்களாக விழா நடைபெற்றிருந்தது. இவ்விழாவில் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர், பாராளுமன்ற உறுப்பினர் சித்தாந்தன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, யாழ் பல்கலைக்கழக சைவ சித்தாந்தத்துறை தலைவர், தவத்திரு. வேலன் சுவாமிகள், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் லலீசன் ஐயா அவர்கள் மற்றும் வலம்புரி பத்திரிகை தலைமை ஆசிரியர் விஜயசுந்தரம் ஐயா அவர்கள் எனப் பல பெரியோர்கள் இவ்விழாவில் கலந்து சிறபபித்திருந்தனர்.

மேலும் இவ்விழாவில் கிளிநொச்சி, வவுனியா, வடமராச்சி, மட்டக்களப்பு, திருகோணமலை, பதுளை என வெளிமாவட்டங்களில் இருந்தும் அடியார் பெருமக்கள் பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர். இவ்விழாவில் சிறப்புரை வழங்குவதற்காக தமிழ்நாட்டிலிருந்து அரன்பணி அறக்கட்டளையின் தலைவர் பவானி.அ. தியாகராசன் ஐயா அவர்கள் கலந்து கொண்டிருந்தார். அவருடன் அரன்பணி திருக்கூட்டத்தின் அடியார்கள் 10 பேரும் பங்கெடுத்திருந்தனர். மேலும் ஒய்வுநிலை போதனாசிரியாரான விநாயகமூர்த்தி ஐயா அவர்களின் சிறப்பு சொற்பொழிவுகளும் இடம்பெற்றிருந்தது.

(27-12-2023) – திருவாதிரை அருள்வழிபாடும் தில்லைக்கூத்தன் திருவீதியுலாவும் இடம்பெற்றது. காலை 4.30 மணிக்கு திருப்பள்ளி எழுச்சியுடன் வழிபாடுகள் ஆரம்பமாகி, 5.30 மணிக்கு எம்பெருமான் திருவீதியுலாவிற்கு எழுந்தருளி வலம் வந்தார். அதனைத் தொடர்ந்து ஆதிரை அருட்காட்சி வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றது.

(27-12-2023) – தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமட நிறுவுனர் அவர்களின் தந்தையாரின் ஆண்டுத் திதி வழிபாடுகள் இடம்பெற்றது.

(01-01-2024) – யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை மங்களநாதர் திருக்கோயிலில் திருவாசக முற்றோதல் இடம்பெற்றது.

(02-01-2024) – செல்வன் ஜோதீஸ்வரன் லசிதன் அவர்களின் இறுதி கிரியை வழிபாடுகள் தென்னடினால் ஆற்றி வைக்கப்பட்டது.

(09-01-2024) – மார்கழித் திங்கள் தேய்பிறை கழுவாய் வழிபாடுகள் இடம் பெற்றது.

(15-01-2024) – தைப் பொங்கல் சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றது.

(16-01-2024) – மாட்டுப்பொங்கல் வழிபாடுகள் இடம்பெற்றது.

(16-01-2024) – செல்வன் ஜோதீஸ்வரன் லசிதன் அவர்களின் இறுதி கிரியை திருவடி பேற்று வழிபாடுகள் தென்னடினால் ஆற்றி வைக்கப்பட்டது.

(22-01-2024) – அயோத்தியில் இராமருக்கு குடமுழுக்கு செய்யும் அதே நேரத்தில், தென்னடில் ஐம்பூதநாதருக்கும் இராவணனுக்கும் திருமஞ்சனம் செய்து வழிபாடுகள் இடம்பெற்றது.

(23-01-2024) – தைத் திங்கள் வளர்பிறை கழுவாய் வழிபாடுகள் இடம்பெற்றது.

திருச்சிற்றம்பலம்

## தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல் – கேட்போம் தெளிவோம்




சிவஞானச் செல்வர்.
மருத்துவர்
ஈசான பிரதாபன்
தேசிகர்


**சைவசமயம் சிவபெருமானுக்கு சொரூப இயல்பு, தடத்த இயல்பு என்று இருவகை இயல்புகள் கூறுகின்றதே, சொரூப இயல்பு, தடத்த இயல்பு என்றால் என்ன? கடவுளுக்கு உருவம் உண்டா? சிவபெருமான் ஏன் உருவங்கள் தாங்குகின்றார்?**

இறைவனுக்கு உருவமுண்டு ஆனால் அந்த இறைவனை யாரும் பார்க்கவில்லை என்பதால் மனிதர் தமது விருப்பத்துக்கு அமைவாக உருவம் வரையக்கூடாது என்கின்றது யூதம், கிருத்தவம்,இசுலாம் முதலிய மதங்கள். இந்த மதங்கள் உருவத்தை இறைவனுக்கு வைத்து வழிபடக்கூடாதென்று வலியுறுத்துவதால், பொதுமக்களில் பலர் இம்மதங்கள் கடவுளுக்கு உருவத்தைக் கற்பிக்கவில்லையென்று தவறாகக் கருதுகின்றனர். உண்மையில், இம்மதங்கள் யாவும் இறைவனுக்கு உரு வத்தை கற்பிக்கின்றன. கடவுள் என்பவர் அரச ஆசனத்தில் வீற்றிருக் கின்றாரென்றும் அவரது வலதுபக்கத்தில் சொர்க்கமும் இடதுபக்கத்தில் நரகமும் உண்டென்றும் கூறுகின்றது. எனவே ஒரு பௌதீக இடத்தில் இருக்கின்றாரென்றும், அது எல்லைகளை உடையதென்றும் உறுதியாகின்றது. அதுபோல், ஆதாமினை கடவுள் தமது கைகளால் செய்து உருவாக்கினார் என்று கூறுகின்றது. மறுமையில் கடவுளைக் காணமுடியுமென்று உருவமுடைய காட்சிப்பொருளாகக் கூறுகின்றது.

இம்மதங்கள் யாவும் தெளிவாக உருவத்தை ஏற்கின்றபோதும், அந்த உருவம் மிக அழகியது என்பதால் அந்த உருவத்தை மனிதரால் சிற்பங்களாகப் படைக்கமுடியாது என்று வலியுறுத்தி உருவவழிபாட்டைத் தடுக்கின்றனவேயொழிய, கடவுளுக்கு உருவம் இல்லையென்று கூறுவதில்லை. இம்மதங்களின் இயல்பை சாலச் சிறப்பாகச் சொல்வதானால், இம்மதங்கள் உருவவழிபாட்டை நிந்திக்கின்ற மதங்களேயொழிய கடவுள் உருவமற்றவர் என்பதை ஏற்கும் மதங்கள் அன்று. எனவே, இம்மதங்களின் இறைவனுக்கு பௌதிக உருவம் உண்டு என்பது பெறப்படும். எல்லாப் பௌதிக உருவங்களும் தோற்றம் தேய்மானம் அழிவு என்பவற்றுக்கு உட்பட்டவை என்பது விஞ்ஞானம். இவ்வாறு விஞ்ஞானத்தோடு முரணுறாது, அருமையான விளக்கத்தை இறைவனுக்கு அளித்து விஞ்ஞானத்தை விஞ்சிய மெய்ஞ்ஞானமாக விளங்குகின்றது சைவசித்தாந்தம். அப்படியென்ன அருமையான விளக்கத்தை சைவசித்தாந்தம் அளிக்கின்றது? சிவபெருமானுக்கு சொரூப இயல்பு, தடத்த இயல்பு என்னும் இருவகையான இயல்புகளுண்டு என்கின்றது சைவசித்தாந்தம்.

### அதுவென்ன இறைவனின் சொரூப இயல்பு? தடத்த இயல்பு?

சைவசித்தாந்தம் இறைவனுக்கு கண்ட அருமையான இலக்கணமே இறைவனின் சொரூபஇயல்பு. இறைவனின் சொரூப இயல்பை சிறப்பியல்பு அல்லது இயற்கைத் தன்மை என்றும்அழைப்பர்.

நீரின் இயற்கைத்தன்மை குளிர்ச்சியாகும். நீருக்கு நெருப்பின் சார்பினால் உண்டாகும் இயல்பு வெப்பமாகும். எனவே, குளிர்ச்சி என்பது நீரின் சொரூப இயல்பு என்றும், கொதிநீர் என்பது நீரின் தடத்த இயல்பென்றும் அழைக்கப்படும். அதாவது ஒன்றின் இயற்கை இயல்பு சொரூப இயல்பாகும். ஒரு பொருளுக்கு அதன் தன்மையில் இயல்பாக என்றுமுள்ள இயல்பு எனப் பொருள்படும். ஒன்றுக்கு பிறிதொன்றின் சார்பினால் உண்டாகும் இயல்பு தடத்த இயல்பாகும்.

பதியாகிய சிவபெருமான் அருவம், அருவுருவம்,உருவம் என்னும் முன்றுவகையான தன்மைகளையும் கடந்தவர். உவமைகள் கொண்டு அளக்கப்படக்கூடியவர் அல்லர். யாவற்றுக்கும் அப்பாற்பட்டவர். யாவற்றுக்குள்ளும் இருப்பவர். தூணிலும் இருப்பவர். துரும்பிலும் இருப்பவர். எங்கும் இருப்பவர். எல்லாவற்றையும் கடந்தும் இருப்பவர். இறைவனின் இந்த இயல்பு சொரூப இயல்பு எனப்படும்.

சொரூப இயல்பு என்பது அருவம், அருவுருவம், உருவம் என்னும் மூன்று தன்மைகளையும் கடந்த இறைவனின் தன்மையாகும்.அருவம் என்பது உருவத்தின் நுண்மை. கண்ணுக்குத் தெரியாத தன்மையை அருவம் என்போம். நுண்ணங்கிகளும் அணுமூலக்கூறுகளும் எமது வெற்றுக் கண்களுக்கு புலப்படுவதில்லை. எனவே அவற்றுக்கு உருவமில்லை என்று கூறத்தான் முடியுமா? எனவேதான் அருவம் என்பது உருவத்தின் நுண்மை என்பதை உணர்ந்து, அருவத்தையும் கடந்த நிலையே இறைவனின் சொரூபநிலை என்கின்றது சைவசித்தாந்தம். இறைவனின் சொரூப இயல்பை மொழிகளால் பூரணமாக விளக்கிக்கூற முடியாது.சொற்பதம் கடந்த தொல்லோன் என்றும் சொல்பதம் கடந்த அப்பன் என்றும் மாணிக்கவாசகப்பெருமான் இறைவனின் இயல்பை சொற்களுக்குள் அடக்கமுடியாது என்று கூறிவிடுகின்றார். இத்தன்மையே சொரூப இயல்பு என்போம்.

**"ஒருநாமம் ஒருருவம் ஒன்றும் இல்லாற்கு"** – திருவாசகம்
**"மூவரும் முப்பத்து மூவரும் மற்று ஒழிந்த தேவரும் காணாச் சிவபெருமான்"** – திருவாசகம்
**"பெண் ஆண் அலி எனும் பெற்றியன்"** – திருவாசகம்
**"பெண்டிர் ஆண் அலி என்று ஒண்கிலை"** – திருவாசகம்
**"இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவனிறைவன் என்றெழுதிக் காட்டொ ணாதே"**– திருநாவுக்கரசு நாயனார் பெருமான்

எவராலும் அறியமுடியாத தன்மையை உடையவர், ஆண், பெண், அலி எனும் பேதங்களைக் கடந்தவர், அருவம்,உருவம்,அருவுருவம் எனும் வடிவங்களைக் கடந்த தன்மையுடையவர், இந்த நிறமுடையவர்,இந்த வடிவம் உடையவர் என்று, திருவருள் வாய்க்கப்பெறாதவர்கள் எழுத்தாலோ சொற்களாலோ விபரிக்கமுடியாத தன்மையை உடையவர் என்று கடவுளின் சொரூப இயல்பை சைவசமயம் கூறுகின்றது.

**சிவன் அருவுருவுமல்லன் சித்தினோடு அசித்தும் அல்லன்**
**பவமுதல் தொழில்கள் ஒன்றும் பண்ணிடுவானும் அல்லன்**
**தவமுதலி யோகபோகத் தரிப்பவனும் அல்லன் தானே**
**இவைபெற இயைந்தும் ஒன்றும் இயைந்திடா இயல்பினானே** – சிவஞானசித்தியார்

"தனியே சிவபெருமானைப் பற்றிக் கருதினால் அவர் உருவம்,அருவுருவம்,அருவம் எனும் வடிவங்கள் அற்றவர். அறிவுள்ள பொருட்களாகவும் அறிவற்ற பொருட்களாகவும் உள்ள எந்த உலகப்பொருட்களாகவும் இல்லை. படைப்பு முதலான தொழில்களைத் தன்பொருட்டு செய்பவனாகவும் இல்லை. தவம், யோகம், போகம் ஆகிய எதனையும் அவர் மேற்கொள்வதில்லை. இவற்றை ஆன்மாக்களுக்கு வழங்குவதன்றி எதையும் அவர் தனக்கு ஏற்பதில்லை. இவை அவரோடு பொருந்தினாலும், இவை எவற்றாலும் அவர் பற்றப்படுவதில்லை" என்று சிவஞானசித்தியார் இறைவனின் சொரூப இயல்பைத் தெளிவுபடுத்துகின்றது.

இச்சொரூப இயல்பை சச்சிதானந்தம் என்று சொல்வர். சத்தாகியும் சித்தாகியும் ஆனந்தமாகியும் நிற்கின்ற இயல்ப் சத்துஸ்ரீசித்துஸ்ரீஆனந்தம்ஸ்ரீ சச்சிதானந்தம் எனப்படும்.

சத்து ஸ்ரீ என்றும் யாதொரு மாற்றமும் இன்றி நிலைபேறுடையதாய் உள்ள தன்மை, சித்து ஸ்ரீ பேரறிவு ஆனந்தம் ஸ்ரீ குறைவில்லா நிறைவுடைய பேரின்பம்

சத்து,சித்து,ஆனந்தம் ஆகிய மூன்று தன்மைகளையும் விரித்து சிவபெருமானுக்கு எண் குணங்கள் உண்டென்று சைவசமயம் கூறும்.

தென்னாடு
செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org

சிவத்திரு. சிவ. செந்தமிழாதன்,
ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
0715588737, aathan@thennadu.org



# கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை!

கண்ணப்ப நாயனாரது வரலாற்றைப்படிக்கின்ற எல்லோருக்கும் வியப்பே விருந்தாகும்! வேடர் குலத்தில் பிறந்த ஒரு வேடனாகிய திண்ணனுக்கு எப்போதும் இறைவனருகில் நீங்காது இருக்கும் உயர் பெரும்பேறு கிடைத்தது. அதுவும் இறை தொண்டு செய்து ஆறாவது நாளே இறைவன் இப்பேற்றினை நல்கினான்.

இப்பெரும் பேற்றுக்கு காரணமாக அமைந்தது கண்ணப்பரது அளவிட முடியாத பத்தியே ஆகும். அது இறைவனோடு கூடிய தன்னலமற்ற அன்பினால் உண்டானது. அது கடவுள் என்று கூட அறியாத கல்லிற்காக தன் கண்ணைக் கொடுத்த அன்பு எனலாம். காட்டில் வேடராய் திரிந்த கண்ணப்பர் சிவலிங்கத்தை அதற்கு முன் அறிந்திலார். முன்பு செய்த தவத்தின் பயனால் சிவலிங்கத் திருமேனி மீது ஈர்ப்பு உண்டாக தன் உடலும் உயிரும் உருக கண்ணப்பர் அன்பு செய்தார். தொண்டு செய்து நாளாறில் கண் இடந்து அப்பினார்! என்றும் அன்பிற்கு உதாரணமானார். இங்கு நாம் கவனிக்க வேண்டியது எம்மில் எத்தனைபேர் இறை அன்பினில் கண்ணப்பருக்கு அருகில் இருக்கின்றோம் என்பதாகும். ஆனால் கசப்பான உண்மை எதுவெனில் எம்மில் யாரும் கண்ணப்பருக்கு தொலைவாக கூட இல்லை.

கண்ணப்பர் அளவுக்கு எம்மால் அன்பு செய்ய இயலாது எனிலும், கண்ணப்பரது அன்பின் திறத்தை காலம் உள்ளவரை புகழ்ந்து பாடி, அடியவரான அவரை வழிபட்டு உய்யும்படி எம் வாழ்வை நாம் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த ஆன்மீகப் பயிற்சிக்கு எம்மை நாம் உட்படுத்தினால் தான் அன்பின் வழியில் அருளைப் பெற முடியும்.

கண்ணப்பரது அன்பின் உச்சத்தைப் பாட விளைந்த மாணிக்கவாசக பெருமான், **"கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்"** என்கின்றார். இவ்வடிகளின் வாயிலாகப் பெரும் செய்தியை எமக்கு தருகின்றார் அவர். உண்மையில் கண்ணப்பரது அன்பினை ஒப்பிட வந்த மணிவாசகர், **"கண்ணப்பன் அன்பின் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்"** எனத்தான் பாடியிருக்க வேண்டும்! ஆனால் அங்கனம் பாடாமல், கண்ணப்பரையும் அன்பையும் பிரித்துப் பார்க்க இயலாமல், கண்ணப்பர் என்றால் அன்பு, அன்பு என்றால் கண்ணப்பர் என்பதை உலகம் அறியும் வகையில் பாடியருளினார்.

இக்காலத்தில் தொண்டு செய்வதற்கு யாரும் தயார் நிலையில் இல்லை. எல்லோரும் தலைவர்களாவதற்கே தம்மை தயார்படுத்துகின்றனர். உண்மைத் தொண்டே தலைமைப் பதவியை ஒருவனுக்கு நல்கும் என்ற எண்ணம் எமக்கு வர வேண்டுமாயின், பதவிகள் மீதான ஆசையைக்களைந்து, பரம்பொருள் மீதான பற்றைக் கண்ணப்பரைப்போல் வளர்த்துக் கொள்ள வேண்டும். தைத் திங்கள் மன்றாலை ஓரையில் (மிருகசீரிஷ நட்சத்திரத்தில்) கண்ணப்பரை அவரது குருபூசைத்தினத்தில் போற்றி வணங்கினோம். ஆனால் அவரது தொண்டினை அந்த தலைமுறைக்கு கடத்தும் வகையில் நாம் என்ன செய்தோம்? இறைவனே,

**"அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பு"** என சிறப்பித்த கண்ணப்பரை கோயில் கட்டி கும்பிட்டாலும் தகுமன்றோ! ஆகம விதிப்படி பூசை செய்த சிவகோசரியார் காணாத, பெறாத திருவடிகளை ஆகமம் விலக்கிய பொருட்களை கொண்டு பூசை செய்த கண்ணப்பர் இலகுவாகக் கண்டு பேரின்பம் அடைந்தார் எனில், ஆகமத்தின் மேலானது அன்போடுசெய்யும் பூசை என்பதை நாம் அறிகின்றோம்.

எனவே, அன்பே ஆகமமாகவும், தமிழ் பாட்டே அர்ச்சனையாகவும் கொண்ட இறைவனை இவ்விரு இலகு முறைகளிலும் நாம் அணுகும் வாய்ப்பு பெற்று இப்புவியில் தமிழ் சைவர்களாய் பிறந்தும், அதன் பலனை அனுபவிக்கும் ஆர்வமின்றி நாம் பிறழ்வான வழிபாடுகள் மீதும் சைவ சித்தாந்தத்துக்கு முரணான, திருமுறைகளுக்கு ஒவ்வாத வழிபாடுகளுக்கு பின்னும் சென்று உயர்ந்த எம் அன்பு நெறியையும், நாயன்மார்களது சிறப்பையும் அறியாது உழல்வது தான், அந்தோ பரிதாபம்! இனியேனும் சைவத்தின் மறுமலர்ச்சி பாதையை வலுவாக்கி சான்றோர்கள் சொன்ன வழியில் அன்பு மார்க்கத்தை ஒழுகி உய்வோமாக!

**திருச்சிற்றம்பலம்**

உ

திருச்சிற்றம்பலம்

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின்
சைவ மாணவர் சபை நடாத்தும்

## திருவாசக மனனப் போட்டிகள்

**மனனம் செய்யவேண்டிய பதிகங்களும் பரிசில்களும்**

### ஆரம்பப் பிரிவு

தரம் 3
**சிவபுராணம் 61 வரிகள்**
பணப் பரிசு 500.00

தரம் 4
**சிவபுராணம் - முழுவதும்**
பணப் பரிசு 750.00

தரம் 5
**சிவபுராணம் மற்றும் திருவெம்பாவை 10 பாடல்கள்**
பணப் பரிசு 750.00

### கீழ்ப் பிரிவு

தரம் 6,7,8
**சிவபுராணம், திருவெம்பாவை**
பணப் பரிசு 1000.00

### மத்திய பிரிவு

தரம் 9,10,11
**சிவபுராணம், திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி**
பணப் பரிசு 3000.00

### மேற் பிரிவு

தரம் 12,13
**சிவபுராணம், திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி, திருப்பொற்சுண்ணம்**
பணப் பரிசு 5000.00

தென்னாடு

உ

### சிறப்புப் பிரிவு

தரம் 3 - 13
**சிவபுராணம், திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி, திருப்பொற்சுண்ணம், போற்றித்திருஅகவல், நீத்தல் விண்ணப்பம்**
பணப் பரிசு 10,000

தரம் 3 - 13
**திருவாசகம் முழுமையாக**
பணப் பரிசு 100,000

மனனம் செய்தவர்கள் ஓதி ஒப்புவிப்பதற்கான நேரத்தினை பாடசாலை ஊடாகவோ அல்லது தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தினை நேரடியாகவோ தொடர்புகொள்ளலாம்.

அலைபேசி இலக்கம்: 070 770 1111-021 222 9722

இணையம்: www.thennadu.org/thiruvasagam

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

**தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்**
தென்னாடு வீதி, கொக்குவில் - யாழ்ப்பாணம்.

மார்கழித் திங்கள், முதலாம் பிறை
ஆதிரை நன்னாள் 2023.

தென்னாடு

# தாய்மொழியாம் தமிழ்மொழியில் அர்ச்சனை

**சலம்பூவோடு தூபம் மறந்தறியேன்**
**தமிழோடிசை பாடல் மறந்தறியேன்**

**(தமிழ் அர்ச்சனை கடந்த திங்கள் தொடர்ச்சி)**

இனி, இன்று திருக்கோயில்களில் தமிழ்த் திருமுறைகளை, திராவிட வேத தோத்திரம் என வழிபாட்டில் ஓதுதல் நடைபெற்று வருகின்றது. அங்ஙனமாக,

தமிழிற்கு இடமே கொடுக்கப்படாதது போல் வைத்து தமிழில் அருச்சனை செய் தல் வேண்டும் என வீண் கிளர்ச்சி செய்தல், ஏன்? எனச் சிலர் எதிர்ப் புக் கூறலாம். அது தமிழ் அருச்சனைக் கோரிக்கைக்குத் தீர்வாகாது. ஏனெனில், திருக்கோயில்களில் ஆறு காலம் - என்ற முறையில் காலந்தோறும் தொடங்கி முறை யாக அருச்சகரால் செய்து முடிக்கப்படும் வழிபாடு உலக நலம் கருதி அனைவர்க்கும் பொதுவாகச் செய்யப்படும் பரார்த்த பூசையாகும்.

திருக்கோயில்களில் ஏதேனும் ஒரு காலத்திற் சென்று, பரார்த்த பூசை முடிந்தபின் தனியார் பலர் தங்கள் நலம் கருதியும், தங்கள் குடும்ப நலம் கருதியும் செய்யும் அருச்சனை ஆன்மார்த்தமானது. அதனைத் தமிழில் செய்ய விரும்புவோருக்குத் திராவிட வேத தோத்திரம் நடத்தப்படுவதைச் சொல்லித் தவிர்த்துவிட முடியாது.

தமிழில் அருச்சனை செய்யப்படவேண் டியதன் இன்றியமையாமை இதுகாறும் இனிது விளக்கப் பட்டது.

ஆகவே, அதற்கு மாறாகச் சொல்லப்படுவன யாவும் வெறும் கண்துடைப்புப் பேச்சாகவே அமையும். உலகனைத்திற்கும் பொது இடமான கோயில்களில் தங்கள் தனி நலச் செய்தியை வலியுறுத்திக் கேட்க அனைத்து மக்களுக்கும் தனியுரிமை உண்டு.

**"கோயில்களில் வடமொழி அருச்சனை பழைய நடைமுறை அதை மாற்றுதல் கூடாது"** எனச் சிலர் வாதிடலாம். "எத்த னைப் பழைய நடைமுறைகளைக் கால நிலைமையை நோக்கி நாம் மாற்றிக் கொண் டோம்" என்பதை அவர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும்.

**"பழையன கழிதலும் புதியன புகுதலும்**
**வழுவல கால வகையி னானே" - (நன்னூல்)**


என்பது தமிழ் இலக்கணச் சூத்திரம்.

**"கோயில்களில் சில இனத்தவர் நுழை யவே கூடாது"** என்பது எவ்வளவோ காலம் இந்திய நாட்டில் நடைமுறை யில் இருந்தது. அந்த இன வேற்றுமைச் செயலை இன்று நாம் அகற்றி, அனை வர்க்கும் சம உரிமையைக் கொடுத்துள்ளோம்.

பெண் கொடுத்தல் வாங்கல்களிலும் இன வேற்றுமை வலுவாகக் கடைப்பிடிக்கப்பட்டது. இன்று அந்நிலைமை நீங்கி, கலப்புத் திருமணங்கள் மிகுவவாயின. சமபந்தி போஜனம் முன்பு இல்லாதது. இன்று சிறப்பாக எங்கும் நடத்தப்படு கின்றது. இவைகளைக்கூட இன்றும் சிலர் உள்ளுக்குள்ளே ஏற்காமல் இருக்கலாம். ஆனால் வெளியே சொல்ல முடியுமோ? முடியாமைக்குக் காரணம் இந்திய நாட்டு அரசே இப்புதிய முறைகளை வலியுறுத்தி, நிலைபெறச் செய்கின்றது.

அத்தகைய நிலைமையில் தமிழ்நாட்டுக் கோயிலில் தமிழ் அருச்சனையை அனும திப்பது எந்தவகையில் நீதிக்குப் புறம் பாகும்? அவ்வாறு அனுமதிப்பது தார்மீக முறைக்கு ஏலாத ஒரு பாதகச் செயலா? அல்ல. ஆகையால் பண்டுதொட்டு அரு ளாளர்கள் காட்டிய நெறி நின்று, அருட் பாடல்களை ஓதி, ஆன்மீக வாழ்வு நடத்தி வரும் தமிழ்ச் சமுதாய மக்கள், ஆலய வழிபாட்டிலும் திருமுறைகள், திவ்வியப் பிரபந்தங்களை ஓதி, வழிபாடு செய்து அருட்பேறு எய்தும் உரிமையைப்பெற மாநில மைய அரசுகளும், நீதித் துறையும் ஆவன செய்வதே அறநெறியாகும். இறை யருள் கூட்ட வேண்டுவோமாக.

**கைகாள் கூப்பித் தொழீர் - கடி**
**மாமலர் தூவிநின்று**
**பைவாய் பாம்பரை யார்த்த பரமனைக்**
**கைகாள் கூப்பித் தொழீர். - அப்பர்**



**தருமை ஆதீனப் புலவர்**
**முதுபெரும் புலவர் சித்தாந்தக் கலைமணி திருமுறை உரைமணி**
**திருநெறித் தமிழ்ச்சுடர் மகாவித்துவான் முனைவர்**
**உயர்திரு. சி. அருணைவடிவேலு முதலியார் அவர்கள்.**

1940-இல் தமிழ் அருச்சனை பற்றி திரு. கா. சுப்பிரமணியபிள்ளை, எம்.ஏ, எம்.எல், அவர்கள் கூறியது:

அர்ச்சனைகளைத் தமிழர்கள் கோயில் களில் தமிழிலேயே நடத்த ஏற்பாடு செய் தல் வேண்டும். பொருள் விளங்காத மொழியில் இறைவனை வாழ்த்துவதி லும் தமிழில் இறைவன் பெயர்களைச் சொல்லி மலர்தூவிப் போற்றுதலே வழிபடுகின்ற வர்களுக்கு அன்பு பயக்கும்.

'ஓம் கணபதயே நம' என்பது 'கணபதிக்கு வணக்கம்' என்று பொருள்படும். கணபதியின் திருவடிவத்தை முன்வைத் துக் கொண்டு வடமொழி யில் படர்க் கையில் 'கணபதிக்கு வணக்கம்' என்று சொல்வதைப் பார்க்கிலும் 'ஓம் கண பதியே போற்றி' என்று முன்னிலையாகத் தமிழில் சொல்வதே சிறந்ததாகும்.

சைவ வைணவ சமயப் பெருந்தலை வர்கள் தமிழிலேயே இறைவனைத் துதித் திருக்கின்றார்கள். ஆதலால் தமிழிலே அர்ச்சனை செய்தல் கூடாது என்றல் பெருந்தவறாகும்.

(தமிழர் சமயம்)

**1967-இல் தமிழ் அருச்சனை பற்றி தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்கள் கூறியது;**

தாய்மொழியில் அருச்சனை என்ற இயக்கம் மொழி வழிப்பட்ட இயக்க மன்று. பிரார்த்தனை, பக்தி என்பன உயி ரின் வளர்ச்சிக்குத் துணை செய்வன. உயி ரின் வளர்ச்சி நெஞ்சத்துடன் தொடர்பு டையது. ஆதலால் நெஞ்சினைத் தொட்டு உணர்வினைத் தூண்டும் மொழிதான் வழிபாட்டு மொழியாக அமைதல் வேண்டும். அந்த வாய்ப்புத் தாய்மொழிக்கே மிகுதியும் உண்டு. இது பொதுவான கொள்கை.

நமது நாட்டில் தமிழில் வழிபாடு என்று கேட்கும் கோரிக்கை பொது வகையால் மட்டுமன்று; உரிமை வகையி னாலும் எழுந்தது. உலகமொழிகளிலே பக்திக்குரிய மொழி தமிழ் தான் என்பது அறிஞர் முடிபு. பக்திக்குரிய அருமையும் எளிமையும் தமிழுக்கு இயல்பாகவே உண்டு. தமிழ், வழிபாட்டு மொழியாகவே வளர்ந்து வந்துள்ள மொழி.

**மந்திரங்களுக்கு மொழி வரையறை இல்லை. நிறைமொழி மாந்தர் அருளிச் செய்தவை மந்திரங்கள்.**

**"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த**
**மறைமொழி தானே மந்திரம் என்ப"**

என்று தொல்காப்பியம் கூறுகின்றது. இதற்கு உரைகண்ட நச்சினார்க்கினியர், **"தானே என்று பிரித்தார். இவை தமிழ் மந்திரம் என்றற்கு"** என்று எழுதுகின்றார். மாதவச் சிவஞான சுவாமிகள் சமஸ்கிரு தத்தின்பாலும் மிகப் பற்றுடையவர் சமஸ்கிருதம் தேவமொழி என்ற கருத்து டையவரே. ஆயினும் தாம் இயற்றிய காஞ்சிப் புராணத்தில் இறைவனை அகத் தியர் பூசித்த பொழுது தமிழ் மந்திரங்கள் கூறிப் பூசித்ததாகக் கூறுகின்றார்.

**மன்னியஇத் தமிழ்க்கிளவி மந்திரங்கள் கணித்தடியேன்**
**செந்நெறியின் வழுவாஇத் திருக்காஞ்சி நகர்வரைப்பின்**
**உன்அனுக்கன் ஆகி இனி துறைந்திடவும் பெறவேண்டும்**
**இன்னவரம் எனக்கருளாய் எம்பெருமான் என்றிரந்தான்.**

என்பது காஞ்சிப்புராணப் பாடல். - (நமது நிலையில் சமயம் சமுதாயம்)

13-03-1999 இல் தமிழ் அருச்சனை பற்றி ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் கூறியது:

ஆதீனகர்த்தர், தொண்டைமண்டல ஆதீனம், காஞ்சிபுரம்

**"அன்பில் பெருகிய சிறப்பின் மிக்க அர்ச்சனைப் பாட்டே ஆகும். ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக"** என்றார் தூமறை பாடும் வாயார் என்று சேக்கிழாரும்,

**"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாகத் தமிழ் செய்யு மாறே"** என்று திருமூலரும்,

**"தமிழோடு இசை கேட்கும் இச்சையால் காசு நித்தல் நல்கினீர்"**

என்று சுந்தரரும் அருளிச் செய்திருப் பதனால் தமிழில் அர்ச்சனை செய்தல் சிறப்புடையது என்று அறிகின்றோம்.

**சதுமறை ஆரியம்வருமுன்**
**சகமுழுதும் நினதாயின்**
**முதுமொழிநீ அநாதிஎன**
**மொழிவதும்ஓர் வியப்பாமோ - என்றும்**
**உன் - சீரிளமைத் திறம்வியந்து**
**செயல்மறந்து வாழ்த்துதுமே - மனோன்மணீயம்.**

இறைவனிடம் வேண்டுதல்

**அழுதேன் அழுதேன்**
**அறியாமையினாலே**
**புழுதியிலே புரண்டேன்**
**புரியாமையினாலே**
**உழன்றேன் உழன்றேன் உண்மை**
**உணராமையினாலே**
**சுழன்று சுழன்று சூறைக்காட்டில்**
**மிதந்து திருவடியை விழைந்தேன்.**

**திருச்சிற்றம்பலம்**


**தமிழ் அர்ச்சனை முற்றும்.**

**மூலம் : இலண்டன் சைவ மாநாடு சிறப்புமலர்**
**2004 - பக்கம் 47**

# சைவத்தை அறிமின் சிவத்தை அறிமின்

**இறைவனுக்கும் உயிருக்கும் பொதுவான இயல்புகள் உண்டா?**

உயிருக்கு அறிதல், செயலாற்றுதல், இச்சை கொள்ளுதல் ஆகிய ஆற்றல்கள் உள்ளன. இவ்வாற்றல்கள் முறையே ஞான சத்தி, கிரியா சத்தி, இச்சா சத்தி எனப்படும். இறைவனுக்கும் இந்த ஆற்றல்கள், அவனின் சத்தியாக, உள்ளன. இவை இறைவனுக்கும் உயிருக்கும் பொது வானவை. இறைவனின் ஆற்றல்கள் எதனாலும் குன்றுதலின்றி முற்றாக வெளிப்படுகின்றன. ஆனால் உயிரின் ஆற்றல்கள் மலத் தொடர்பால் முற்றாக வெளிப்படுவதில்லை.



**இறையருளைப் பெறுவதற்கு ஞானிகள் இறைவனுடன் தந்தை மகன் உறவு போன்ற பலவகை உறவுகளை வளர்ப்பதாகக் கூறப்படுகிறது. இத்தகைய உறவுகள் எத்தகையன?**

மகன் தன் தந்தையைக் கனம் பண்ணிப் பணிவது போன்று சாதகனும் இறைவனைத் தந்தையாகக் கொண்டு ஆன்மீக சாதனையில் ஈடுபடலாம். இந்த வழி சற்புத்திர மார்க்கம் எனப்படும். இன்னொரு வழி இறைவனை எசமானாகவும் தன்னைச் சேவகனாகவும் கொண்டு சாதனையில் ஈடுபடுவது. இது தாசமார்க்கம் எனப்படும். மூன்றாவது வழி தோழர் இருவரின் உறவு நிலையில் நின்று சாதனை செய்வது. இது தோழமை மார்க்கம் அல்லது சகமார்க்கம் எனப்படும். நான்காவது வழி குரு சீடன் உறவு போன்றது. இது ஞான மார்க்கம் எனப்படும். இந்த நாலு வழிக்கும் உதாரணமாக முறையே சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகரின் வழிகளைக் கூறுவதுண்டு.

மேற்கூறப்பட்ட வழிகள் எல்லாம் பாவனையால் இறைவனுடன் கொண்ட உறவுகள் என்பது குறிப்பிடத்தக்கது. இறைவனுக்கும் உயிருக்கும் உள்ள உறவு ஆண்டான் - அடிமை உறவே. எந்த நிலையிலும் அவன் ஆண்டான், நாம் அடிமை. சுந்தரமூர்த்தி நாயனார் “மீளா அடிமை உமக்கே ஆளாய்” என்று கூறுவதிலிருந்து இதனை உணரலாம். அவரை இறைவன் ஆட்கொண்ட வரலாறும் இதனை உணர்த்துவதாக உள்ளது.

**கணவன்- மனைவி, அல்லது நாயகன்- நாயகி உறவு சைவத்தில் இல்லையா? சில திருமுறைப் பாடல்களில் இதனைக் காணக் கூடியதாக இருக்கிறதே.**

இறைவனுக்கும் உயிருக்கும் உள்ள உறவு நாயகன் - நாயகி உறவு போன்றது என்பது சைவத்தில் இல்லாத ஒன்று. இது வைணவத்தில் காணக் கூடியது. அப்பரடிகளின் “முன்னம் அவனுடைய” என்று தொடங்கும் தேவாரத்தில், ஒரு கன்னிப்பெண் சிவன் மேல் காதல் கொண்டு அவனுடைய பெயர், ஊர் முதலியனவற்றைக் கேட்பதான செய்தி வருகிறது. இறுதியில், இத்தேவாரம் “தன்னை மறந்தாள், தன் நாமம் கெட்டாள், தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே” என்று முடிகிறது. இங்கே ஆன்மா கன்னியாக உருவகிக்கப்படுகிறது. தலைவனான இறைவனை அடைய வேண்டுமென்ற உயிரின் துடிப்பு உணர்த்தப்படுகிறது. ஆனால் இறைவனின் திருவடியை அது முடிவில் அடைவதாகக் கூறப்படுகிறது. அவனின் திருத்தாள் அவனின் அருளைக் குறிப்பது. ஆன்மா இறுதியில் சிவனருளில் திளைக்கிறது. இங்கே நாயகன் - நாயகி உறவுக்கு இடமில்லை.

சில திருமுறைப் பாடல்கள் தமிழிலுள்ள அகத்திணைப் பாடல் மரபில் உள்ளன. அவற்றில் தலைவன் - தலைவி உறவு பாவனையாக வருகிறது. இவற்றைச் சைவ சித்தாந்தப் பின்னணியில் கண்டு பொருள் காணவேண்டும்.

**நாம் புற உலகத்தோடு நெருக்கமான உறவைக் கொண்டுள்ளோம். இதனைத் துண்டித்து இறைவனுடன் நெருக்கமான உறவைக் கொள்ள முடியுமா?**

புற உலகத்துடன் மாத்திரமின்றி பொறி புலன்களுடனான அக உலகத்துடனும் நெருக்கமான உறவு கொண்டுள்ளோம். புலன்களின் வழியில் சென்று உலகப் பற்றை வளர்க்கிறோம். இது உயிரியின் இயல்புக்கு ஏற்றதல்ல. இறையருளில் வாழ்வதே உயிரின் உண்மை இயல்பு என்பதை உணரும்போது புலன்களை ஈர்க்கும் உலகப் பொருட்களின் மேலுள்ள பற்று நீங்கி விடும்.

**உலகப்பற்று நீங்கி இறைபற்று வளர்வதற்கு இந்த நிலை வருவதற்கு வழி என்ன?**

சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய ஆன்மீக வழி நான்கிலும் சாதனை செய்து வளர்ச்சியடையும் போது இறையருளைப் பெறும் பக்குவநிலை கிட்டும். அப்பொழுது எமது பொறி புலன்களின் வழி செல்வது நின்று, உலகப் பற்று நீங்கி இறை அருளின் வழியிற் செல்வோம்.

**சரியை, கிரியை ஆகியன பற்றி விளக்குக.**

சிவாலயத்துக்கும் சிவனடியார்களுக்கும் தொண்டு செய்தல் சரியை. சிவலிங்கப் பெருமானை அகத்தும் புறத்தும் பூசித்தல் கிரியை. விடயங்களின் வழியே போகாவண்ணம் மனத்தை நிறுத்தி சிவத்தைத் தியானித்து, பின்பு தியானிப் போனாகிய தானுந் தியானமுந் தோன்றாது தியானப் பொருளாகிய சிவம் ஒன்றே விளங்கப் பெறுதல் யோகம். பதி பசு பாசம் என்னும் முப்பொருள்களின் இலக்கணங்களை அறிவிக்கும் ஞான நூல்களைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நிட்டை கூடல் ஞானம். (இவ்விளக்கம் தவத்திரு ஆறுமுகநாவலரின் ‘சைவ வினா விடை’ இரண்டாம் புத்தகத்தில் காணப்படுவது. சுருக்கமாகவும் தெளிவாகவும் உள்ளது என்பதால் அப்புத்தகத்தில் உள்ளவாறே தரப்பட்டுள்ளது.)

**இத்தகைய அனுபவத்தில் குருவின் இடமென்ன? கடவுள் குருவாக வருவதுண்டா?**

முற்பிறவிகளில் செய்த ஆன்மீக சாதனைகளின் பலனாகப் பக்குவமடைந்த பொழுது, குரு வந்து எமது உண்மை இயல்பு இறையருளில் வாழ்தல் என்பதை உணர்த்துவார். பிறவிகள் தோறும் எம்மைப் பேணி வழி நடத்தும் இறைவனே இதனை உள் நின்றும் உணர்த்துவான் குரு மூலமாகவும் உணர்த்துவான். மாணிக்கவாசகர் வாழ்வில் வந்தது போல் நேராகக் குரு வடிவில் வருவான். இறைவன் எடுக்கும் வடிவம் எமக்குள்ளவைபோல மாயையினால் ஆனதல்ல அது அருள் வடிவம், என்பது சிந்தனைக்குரியது.

திருச்சிற்றம்பலம்

மூலம் - சைவ சித்தாந்த வினாவிடை
(கலாநிதி க.கணேசலிங்கம்)

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று – பெரிய புராணம்:

# திருத்தொண்டு நெறிவாழ உதித்த ஞானத்தவ முனிவர் திருநாவுக்கரசர்





சிவத்திரு.
பா.சிவமாதவன்
புதுக்கோட்டை

**"திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட திருநாவுக் கரையன்றன் அடியார்க்கும் அடியேன்"**

### அப்பரும் அண்ணாமலையும்

திருப்பைஞ்ஞீலியில் பெருமானை வணங்கி தமிழ் பாடிய தமிழாளியார் அங்கிருந்து அகன்று திருமாலும் பன்றியாய் சென்றுணரா திருவண்ணா மலையினை அடைந்தார். அண்ணாமலைக்கு அப்பர்பிரான் சென்றதை தெய்வச் சேக்கிழார் பெருமான் சிறப்பாக நமக்கு காட்டுகிறார். அப்பாடல்,

**நாதர் மருவுந் திருமலைகள் நாடும் பதிகள் பலமிகவுங்**
**காதல் கூரச் சென்றிறைஞ்சிக் கலந்த இசை வண்டமிழ் பாடி**
**மாதொர் பாகர் அருளாலே வடபால்நோக்கி வாகீசர்**
**ஆதிதேவர் அமர்ந்த திருவண்ணாமலையை நண்ணினார்.** *(311)*

இவ்விடத்திலே பெருமானை ஆதி தேவர் என்ற பெயரில் குறிப்பிடுகிறார். "ஓர் நாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லார்க்கு, ஆயிரம் திருநாமம் பாடி தெள்ளேனம் கொட்டாமோ" என்பது மணிவாசகரின் வாக்கு. ஆகவே, இறைவன் யாவற்றையும் கடந்து நிற்கின்றான். கற்பனை கடந்த சோதியாக விளங்குபவன், உயிர்களின் பொருட்டு கருணையினால் உருவெடுத்து அருள் செய்கின்றான். எனவே தான் மணிவாசகப் பெருமான் இறைவனுக்கு குறிகளும் குணங்களும் இல்லை என்பதை "குறிகளும் குணங்களும் இல்லாக் குணக்கடல்" என்ற வரியின் வாயிலாக விவரிக்கிறார். அப்படியே இருந்தால் உயிர்கள் என்னாவது? எப்படி உய்வு பெறும்? யாரை வணங்கும்? என்ற கேள்விகள் நேரலாம். எனவேதான் இந்த உலகங்களை எல்லாம் படைத்து, காத்து, கரந்து, மறைத்து அருள் செய்வதற்காக ஒருவன் இருக்கிறான் என்பதை அருளாளர்கள் நமக்கு அடையாளப்படுத்தி இருக்கின்றனர்.

அப்படிப்பட்ட இறைவனுக்கு ஆயிரம் திருநாமங்கள் இருக்கின்றன என்று திருமுறை கூறுகிறது. அதற்கு மேலும் இருக்கலாம். அப்படிப்பட்ட திருநாமத்தில் எது சிறந்தது? என்று கேள்வி எழுந்தால், இறைவனுடைய பெயர் என்பதே சிறப்பான பெயர் தான். இந்த இடத்தில் நாம் இதை குறிப்பிட காரணம், நம்முடைய முன்னோர்கள் தன்னுடைய குழந்தைகளுக்கு நல்ல தமிழ் பெயர்களை, குறிப்பாக இறைவனைக் குறிக்கின்ற பெயர்களை முதன்மையாகவும், அதன் பிறகு இயற்கையைக் குறிக்கின்ற பெயர்களையும் வைத்து மகிழ்ந்திருக்கின்றனர். இயற்கையை குறிப்பிடும் பொழுது அது இயல்பாகவே இறைவனை உணர்த்தும் என்பது உள்ளார்ந்த கருத்து. சரி, பெயர்களைப் பற்றி இவ்வளவு விரிவாகச் சொல்ல வேண்டிய அவசியம் என்னவென்றால், இந்தப் பாடலில் தெய்வச்சேக்கிழார் பெருமான் திருவண்ணாமலையில் இருக்கின்ற பெருமானை குறிப்பிடும் போது ஆதிதேவன் என்கின்ற பெயரை நமக்குச் சுட்டிக்காட்டுகிறார். மணிவாசகப் பெருமான் இறைவனுடைய ஊர் உத்தரகோசமங்கை என்றும், அவனுடைய நாடு தென்பாண்டி நாடு என்றெல்லாம் குறிப்பிடுகிறார். அதில் இறைவனுடைய பெயரை குறிப்பிடும் பொழுது, **"தேவ தேவன் திருப்பெயர் ஆகவும்", "மாதேவன்", " தேவர் பிரான்" என்று இறைவனை தேவன், மாதேவன் என்கின்ற பெயரின் வழியாக நமக்குக் காட்டுகிறார். திருநாவுக்கரசப் பெருமானும் "தேவார்ந்த தேவன்"** என்கின்ற முறையில் இறைவனை நமக்குக் காட்டுகிறார்.

எனவே **"ஆதிதேவன்"** என்பது மூல முதல்வர் எனப் பெறப்படுகிறது. பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருளாகியது இதுவேயாம். முழுமுதல் அவன் தான் என்று அருளாளர்கள் நிரம்பக் குறிப்பிடுகின்றனர். திருவண்ணாமலையின் பழமை கருதியும் அவ்விடத்தில் இருக்கக்கூடிய பெருமானை குறிப்பிடும் பொழுது **"ஆதி தேவன்"** என்கின்ற பெயரில் நமக்கு வழங்கி இருக்கிறார்.

திருநாவுக்கரசப் பெருமான் திருவண்ணாமலைக்கு மூன்று திருப்பதிகங்கள் பாடியுள்ளார். நான்காம் திருமுறையில் ஒன்றும், ஐந்தாம் திருமுறையில் இரண்டுமாக நமக்கு பாடியருளியிருக்கிறார். இதில் தேவர்களாலும் அணுக முடியாத அண்ணாமலையை அப்பர் பிரான் நண்ணினார் என்று குறிப்பிடுகிறார். எனவே தலையாய தேவாதி தேவர்க்கு என்றும் சேயானாக இருக்கக் கூடியவன், அவன்கண் அன்புவைத்து அடியவராகி நிற்பவர்க்கு நணுகும் வண்ணம் அவன் வெளிப்படுவான் என்பது வெளிப்படை.

இன்னும் கூடுதல் சிறப்பாக திருவண்ணாமலையை நாம் எப்படி வணங்க வேண்டும் என்பதை அப்பரின் வழியில் நின்று தெய்வ சேக்கிழார் பெருமான் நமக்கு காட்டுகிறார். அப்பாடல்,

**செங்கண் விடையார் திருவண்ணாமலையைத் தொழுது வலங்கொண்டு**
**துங்க வரையின் மிசையேறித் தொண்டர்தொழும்புக்கெதிர்நிற்கும்**
**அங்க ணரசைத் தொழுதெழுந்து திளைத்துத் திருநாவுக்கரசர்**
**தங்கு பிறப்பே வீட்டினுக்கு மேலாம் பெருமை சாதித்தார்.** *(312)*

முதலில் திருவண்ணாமலைக்கு செல்லும் பொழுது தூரத்தில் மலையினைக் கண்டதும் வணங்க வேண்டும். பிறகு அதனை மலைவலம் வர வேண்டும். அதன் பிறகு அந்த மலையின் மீது ஏறி பெருமானை வணங்க வேண்டும் என்பதாக நாவரசப் பெருமானின் திருவண்ணாமலை வழிபாட்டை நமக்கு அழகு பெற காட்டுகிறார். அதன் தொடர்ச்சியாகவே இன்றும் மலைவலம் செய்தல் மிக சிறப்பாக தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றது. தாண்டகவேந்தர் திருவண்ணாமலையைத் தொழுது வணங்கி எழுந்து இருக்கின்ற பொழுதிலே அவருடைய உயிர் எப்படி இருந்தது என்பதை, **"தங்கு பிறப்பே வீட்டிற்கு மேலாம் பெருமை சாதித்தார்"** என்று தெய்வச் சேக்கிழார் பெருமான் காட்டுகிறார். வீட்டிற்கு மேலான பெருமை என்று இந்த இடத்தில் அவர் குறிப்பிடுகையில், **"வீடும் வேண்டா விறலின் விளங்கினார்"** என்ற திருக்கூட்டச் சிறப்பை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. ஏனெனில் அப்பர் பெருமான் எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால் மனித்த பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே என்று குறிப்பிடுவார். இறைவனை கண்ணாரக் கண்டு அந்த இன்பத்தை இங்கேயே பெறுவதால் இதற்கு மேலான இன்பம் எது இருக்கப் போகிறது என பாடியதன் வாயிலாக இந்தப் பிறவியே இறைவனை வணங்குவதற்காகத்தான் என்பது புலனாகிறது.

**அண்ணாமலைமேல் அணிமலையை ஆரா அன்பின் அடியவர்தம்**
**கண்ணார் அமுதை விண்ணோரைக் காக்கக் கடலில் வந்தெழுந்த**
**உண்ணா நஞ்சம் உண்டானைக் கும்பிட்டு உருகும் சிந்தையுடன்**
**பண்ணார் பதிகத் தமிழ்பாடிப் பணிந்து பரவிப் பணி செய்தார்.** *(313)*

தெய்வச் சேக்கிழார் பெருமான், திருநாவுக்கரசப் பெருமான் திருவண்ணாமலையில் பாடிய திருப்பதிகத்தைக் குறிப்பிடுகையில், **"அண்ணாமலைமேல் அணிமலை"** என்று குறிப்பிடுகிறார். அண்ணாமலையின் மீது யாவராலும் அணுக முடியாதவனாக இருக்கக்கூடிய இறைவன் அடியவர்களுக்கு அணுகும் வண்ணமாக இருக்கின்றான் என்பதை நமக்கு அண்ணாமலை் அணிமலை என்ற சொற்களின் வாயிலாக தெளிவுபடுத்துகிறார். அதே போன்று திருவாசகத் தொடர்களை பெரிய புராணத்தில் வெகுவாக நாம் காண முடியும். சைவர்கள் பெரிய புராணத்தைப் படிக்கின்ற பொழுது, மணிவாசகப் பெருமானை ஒரு அடியாராக சேர்க்கவில்லையே என்று எண்ணுவது உண்டு. ஆனால் அதற்கான காரணம் அவர் தொகை, வகை, விரி என்பதாகதான் பெரிய புராணத்தை அருளியிருக்கிறார். இருப்பினும் திருவாசக வரிகள் பெரியபுராணத்தில் நிறைய வருகின்றன. இப்பாடலிலும் கூட **"அண்ணாமலையெம் அண்ணா போற்றி கண்ணாரமுதக் கடலே போற்றி", "அண்ணாமலையான் அடிக்கமலம்"** எனத் தொடங்கி, **"கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல் பாடி"** என நிறைவுறும் ஓர் திருவம்பாவை பாடலும் நினைவிற்கு வருகிறது. அருளாளர்கள் இறைவனை குறிப்பிடும் பொழுது ஒருவருக்கொருவர் எந்த இடத்திலும் மாறுபாடுகள் இன்றி குறிப்பிட்டிருக்கின்றனர் என்பதும் ஈண்டு புலனாகிறது.

**அப்பர் பிரான் அருளிய திருவண்ணாமலைத் திருப்பதிகங்கள்:**

**ஓதி மாமலர்கள் தூவி உமையவள் பங்கா மிக்க**
**சோதியே துளங்கும் எண்தோள் சுடர்மழுப் படையினானே**
**ஆதியே அமரர் கோவே அணி அணாமலை உளானே**
**நீதியால் நின்னை அல்லால் நினையுமா நினைவு இலேனே.** *(4.63.1)*

**வட்டனை(ம்), மதிசூடியை, வானவர்**
**சிட்டனை, திரு அண்ணாமலையனை,**
**இட்டனை, இகழ்ந்தார் புரம்மூன்றையும்**
**அட்டனை, அடியேன் மறந்து உய்வனோ?** *(5.4.1)*

**பட்டி ஏறுகந் தேறிப் பல இல்லம்**
**இட்டமாக இரந்து உண்டு உழிதரும்**
**அட்டமூர்த்தி அண்ணாமலை கை தொழக்**
**கெட்டுப் போம் வினை கேடில்லை காண்மினே.** *(5.5.1)*

திருச்சிற்றம்பலம்

**திருநாவுக்கரச நாயனார் புராணம் (301 - 310)**

# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்-

## அருள்மிகு திருவெண்ணீற்று உமையம்மை உடனுறை சிவலோகத்தியாகர் திருக்கோயில் - திருநல்லூர்ப் பெருமணம் (ஆச்சாள்புரம்)

## தேவாரப் பாடல்பெற்ற 274 சிவபுரங்களில் 5ஆவது திருக்கோயில் – திருநல்லூர்ப் பெருமணம்





**"அன்புறு சிந்தையராகி அடியவர் நன்புறு நல்லூ
ர்ப் பெருமணம் மேவிநின்
றின்புறும் எந்தை இணையடி யேத்துவார் துன்புறு
வாரல்லர் தொண்டுசெய் வாரே."**

யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகமும் என்பதை பறைசாற்றி எம்பெருமகனார் திருஞானசம்பந்தர் திருமணக்கோலத்துடன் தனது திருமணத்திற்கு வந்தவர்கள் அனைவரையும் சேர்த்துக்கொண்டு சிவ சோதியில் கலந்த பேரருள் பெற்ற திருத்தலமே திருவெண்ணீற்று உமையம்மை உடனுறை சிவலோகத்தியாகர் உறையும் திருநல்லூர் பெருமணம்.

**அமைவிடம்: மயிலாடுதுறை மாவட்டம், தமிழ்நாடு**

இது மயிலாடுதுறை மாவட்டத்தின் சீர்காழி வட்டத்தில் அமைந்துள்ளது. சிதம்பரத்தில் இருந்து சீர்காழி செல்லும் சாலையில் கொள்ளிடம் பாலம் கடந்து சென்றால் கொள்ளிடம் ஊர் வரும். அங்கிருந்து ஆச்சாள்புரம் செல்லும் கிளைச் சாலையில் சுமார் 5 கி.மீ. சென்று இந்த சிவத்தலம் அடையலாம்.

**இறைவர் திருப்பெயர்: சிவலோகத் தியாகேசர், பெருமணமுடைய மகாதேவர்.**
**இறைவியார் திருப்பெயர்: வெண்ணீற்று உமை நங்கை, சுவேத விபூதி நாயகி, விபூதிகல்யாணி.**
**கோயில் மரம்: வில்வம் மரம்.**
**தீர்த்தம்: பஞ்சாட்சரதீர்த்தம் முதலான 11 தீர்த்தங்கள்.**
**வழிபட்டோர்: சம்பந்தர், சேக்கிழார், பிரமன், முருகன், பிருகு, வசிட்டர், அத்ரி, வியாசர், மிருகண்டு, அகத்தியர், ஜமதக்னி. (காகபுசுண்ட ரிஷி ஐக்கியமான தலம்).**
**பாமாலை: சம்பந்தர், சேக்கிழார்.**

### திருத்தலத்தின் மீது பாடப்பட்டத் திருப்பதிகங்கள்

### திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம்

**கல்லூர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டுமெய் யாய்த்தில
சொல்லூர்ப் பெருமணஞ் சூடல ரேதொண்டர்
நல்லூர்ப் பெருமண மேயநம் பானே.**

### சேக்கிழார் பெருமான் குறிப்பிடுவது

**"காதல் மெய்ப் பதிகம் கல்லூர்ப் பெருமணம் எடுத்துக் கண்டோர்
தீதுறு பிறவிப் பாசம் தீர்த்தல் செம் பொருளாகக் கொண்டு
நாதனே நல்லூர் மேவும் பெரு மண நம்பனே உன்
பாத மெய்ந் நீழல் சேரும் பருவம் ஈது என்று பாட "**

### திருத்தலச் சிறப்பு

சுமார் 1300 ஆண்டுகளுக்கு முன்பு வேத நெறி தழைத்தோங்கவும், சைவத்துறை விளக்கம் பெறவும் திருஞான சம்பந்தர் அவதரித்த தலம் சீர்காழி. அதுபோல் நமச்சிவாய திருப்பதிகம் பாடி தம்முடன் வந்தோரை எல்லாம் சிவசோதியில் புகுமாறு சொல்லி, தாமும் தன் மனைவியுடன் சோதியுட் புகுந்த சிறப்புடைய தலமே ஆச்சாள்புரம். இவரை உடலால் சிறியவர், உணர்வால் பெரியவர் என சேக்கிழார் போற்றுகிறார்.

ஆச்சாள், ஆயாள் என்பது அம்பிகையின் பெயர்கள். ஆச்சாளே நேரில் வந்து ஞானசம்பந்தரின் திருமணத்திற்கு வந்திருந்தவர்களுக்கு திருநீறு அளித்ததால் அம்மனுக்கு திருவெண்ணீற்று உமையம்மை என்ற திருநாமமும், இத்தலத்திற்கு ஆச்சாள்புரம் என்ற பெயரும் ஏற்பட்டது.

சம்பந்தர் மணக்கோலத்துடன் சோதியுள் கலந்த காரணம் பற்றி இத்தலத்திற்கு முத்தித்தலம் என்றும் பெயருண்டு. இக்கோயிலில் ஞானசம்பந்தர் திருமணம் செய்துகொண்ட 'தோத்திர பூர்ணாம்பிகை' அம்மையுடன் மணகோலத்தில் உள்ள மூலத்திரு மேனிகள் உள்ளன. சுவாமி சந்நிதி வாயிலில் மேற்புறம், ஞானசம்பந்தர் சோதியில் ஐக்கியமான காட்சி வண்ண சுதை ஓவியமாக உள்ளது. ஞானசம்பந்தர் மனைவியுடன் (தோத்திர பூர்ணாம்பிகை) இத்தலத்தில் இருப்பது அற்புதமானது .

உள்வாயிலில் இருபுறமும் தலப் பதிகக் கல்வெட்டுக்கள் உள்ளன. நால்வரைத் தொடர்ந்து, அறுபத்துமூவர் சந்நிதியில் - நாயன்மார்கள் பெயர், குருபூசை நாள் நட்சத்திரம் முதலியன எழுதப்பட்டு அழகாகவுள்ளன. சோழ, பாண்டிய, மகாராட்டிர மன்னர்கள் காலத்திய கல்வெட்டுக்கள் உள்ளன் கல்வெட்டில் இறைவன் 'திருப் பெருமணமுடைய மகாதேவர்' என்று குறிக்கப்படுகின்றார். நாடொறும் ஆறு கால வழிபாடுகள் செம்மையாக நடைபெறுகின்றன. இத்தலபுராணம் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகரால் பாடப்பட்டுள்ளது.

### திருத்தல வரலாறு

சீர்காழியில் சிவபாதஇருதயரின் மகனாக உதித்த சம்பந்தர். இவருக்கு 16 வயது நடக்கும் போது, இவரை திருமணம் செய்து கொள்ளும் படி தந்தை கூறினார். முதலில் மறுத்த சம்பந்தர், பின் 'இறைவனின் விளையாட்டு தான் இது', என்று சம்மதித்தார். மயிலாப்பூரில் சிவநேச செட்டியாரின் மகளை பெண் பார்த்து முடித்தனர். அவள் திடீரென இறந்து போனாள். அவளுக்கு உயிர் கொடுத்த சம்பந்தர் அவளை தன் மகளாக ஏற்றார். அப்பெண் இறைப்பணியில் மூழ்கி விட்டார்.

இதன்பிறகு, நல்லூரில் உள்ள நம்பியாண்டார் நம்பியின் மகள் மங்கை நல்லாள் நிச்சயித்தார் சிவபாத இருதயர். ஞானசம்பந்தரும் மணக்கோலம் பூண்டார். ஆச்சாள்புரம் கோயிலில் திருமணம் நடக்க இருந்தது. திருநீலக்க நாயனார் மணவிழா சடங்குகளை செய்தார். சம்பந்தர் அக்கினியை வலம் வரும் போது **"இருவினைக்கு வித்தாகிய இல்வாழ்க்கை நம்மை சூழ்ந்ததே, இனி இவளோடும் அந்தமில் சிவன் தாள் சேர்வேன்"** என்று கூறி, **"கல்லூர்ப் பெருமணம்"** என தொடங்கும் பதிகம் பாடி சிவனின் திருவடியில் சேரும் நினைவோடு இறைவனை வழிபட்டார். அப்போது எல்லாம் வல்ல ஈசன், பெருஞ்சோதியாக தோன்றி, **"நீயும் உனது மனைவியும் திருமணம் காண வந்தோர் அனைவரும் இந்த சோதியில் கலந்து விடுக"** என்று அருள்புரிந்தார். இந்த காட்சியைக் கண்ட ஞானசம்பந்தர் மெய்சிலிர்த்து,

**"காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமசிவாயவே"**

எனத் தொடங்கும் நமசிவாய திருப்பதிகம் பாடி அனைவருக்கும் முத்தி வழங்கி, தாமும் தன் துணைவியார் மங்கை நல்லாளுடன் சிவசோதியில் கலந்தார். இந்த பதிகம் தான் சம்பந்தர் தன் வாழ்நாளில் பாடிய கடைசிப் பதிகமாகும். ஆண்டு தோறும் வைகாசி மூல விழாவில் இந்த காட்சி திருவிழாவாக நடைபெற்று வருகின்றது.

### திருக்கோயில் அமைப்பு

சிவலோக தியாகேசர் திருக்கோயில் கிழக்கு நோக்கி ஐந்து நிலைகளை உடைய இராச கோபுரத்துடன் காட்சி அளிக்கிறது. ஆலயத்தின் 11 தீர்த்தங்களில் ஒன்றான பஞ்சாட்சர தீர்த்தம் கோவிலுக்கு எதிரில் உள்ளது. இராச கோபுரத்தின் வாயிலாக உள்ளே நுழைந்தவுடன் கவசமிட்ட கொடி மரம் மற்றும் நந்தி மண்டபமும் அடுத்து நூற்றுக்கால் மண்டபமும் அமைந்துள்ளன. நூற்றுக்கால் மண்டபத்தில் திருஞானசம்பந்தர் அவர் மனைவி தோத்திர பூர்ணாம்பிகையுடன் மணக்கோலத்தில் தனி சந்நிதியில் காட்சியளிக்கிறார். அதை அடுத்து கிழக்கு நோக்கிய சிவலோக தியாகேசர் சந்நிதி உள்ளது.

சுவாமி கருவறை சுற்றுத் திருமுன்களாக விநாயகர், வேலைப்பாடமைந்த ஆலமர்கடவுள் (தட்சிணாமூர்த்தி), பெருஞ்சோதியன் (இலிங்கோத்பவர்), நான்முகன், மலைமகள் உள்ளனர். சுவாமி சந்நிதி வாயிலில் மேற்புறம் வண்ணச் சுதையில் சம்பந்தர் ஐக்கியமான காட்சி உள்ளது. இராண விமோசனர் சந்நிதியும், அதையடுத்து திருமகள் சந்நிதியும் கருவறை மேற்கு சுற்றுப் வீதியில் உள்ளன. இறைவி திருவெண்ணீற்று உமையம்மை சந்நிதி தனிக்கோயிலாக மேற்கு வெளி வீதியில் மதில் சூழ்ந்த தனி வாயிலுடன் ஒரு சுற்று வீதியுடன் அமைந்துள்ளது.


திருநீலகண்ட யாழ்ப்பாணர், முருக நாயனார், திருநீலக்க நாயனார் ஆகியோர் இத்தலத்து இறைவனை வழிபட்டுள்ளனர். திருஞான சம்பந்தர் திருமணத்திற்கு வந்தவர்களுக்கு உமையம்மையே நேரில் வந்து திருநீறு அளித்ததால் அம்பிகைக்கு திருவெண்ணீற்று உமையம்மை என்ற பெயர் ஏற்பட்டது. இறைவியின் சந்நிதியில் குங்குமத்திற்கு பதிலாக திருநீறு தான் பிரசாதமாக வழங்கப்படுகிறது. இதைப் பூசிக்கொண்டால் பெண்களுக்கு திருமண பந்தம் நீடித்திருக்கும் என்பது நம்பிக்கை.

**திருச்சிற்றம்பலம்**

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**

# சிவபூமியில் சிவனைத் தேடி

## 2000 வருடங்களுக்கு முற்பட்ட வரலாற்றைக் கொண்ட முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் தான்தோன்றீச்சரம்





எவராலும் உருவாக்கப்படாது தானே உருவாகிய அற்புத இலிங்கத்தைச் சுயம்பு லிங்கம் என்று கூறுவர். இலங்கையில் தான்தோன்றியாக பசுபதியானவன் எழுந்தருளி சைவ பத்தர்களுக்கு அருள் சுரக்கும் பதிகள் இரண்டு ஆகும். அவை மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம், முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் தான்தோன்றீச்சரம் என்பனவாகும். இவை இரண்டும் ஈழத்து சைவநன் மக்களின் பெருமதிப்பைப் பெற்றவை. பாடல் பெற்ற திருக்கோணேச்சரம், திருக்கேதீச்சரம் ஆகிய இரண்டையும் ஒல்லாந்தர் இடித்துச் சிதைத்தார்கள். ஆனால் மேற்குறிப்பிட்ட தான்தோன்றீச்சரக் கோயில்கள் தோன்றிய காலம் தொட்டு எவராலும் அழிவுநிலைக்குட்படாது இருப்பது இலிங்கத் திருமேனியில் உறைந்துள்ள சிவபெருமானின் திருவருள் ஆட்சியே ஆகும். எனவே மானிடரால் நிறுவப்பட்டு பூசிக்கப்படும் சிவலிங்கங்களை விட தான் தோன்றியாக உருவாகிய சிவலிங்கங்களைக் காண்பதுவும், அவற்றைக் பூசிப்பதுவும் பெரும் புண்ணியங்களே என்பதைச் சைவர்கள் உணர வேண்டும்.

### திருத்தல அமைவிடம்

ஈழத்தின் வன்னி பெருநிலப்பரப்பில் முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள பழம்பெரும் ஊர் ஒட்டுசுட்டான் ஆகும். இவ்விடம் குளம், அடர்ந்த வனம் சூழ்ந்திருக்க இவ் ஆலயம் அமைந்துள்ளது.

### கோயில் வரலாறு

**கர்ண பரம்பரைக் கதைகள் :** இக் கோயில் தோன்றிய காலம் பற்றித் திட்டவட்டமாக அறியமுடியவில்லை. இருப்பினும் இப் பிரதேசத்தாரிடையே நிலவும் கர்ண பரம்பரைச் செய்திகளின் படி இவ் ஆலயம் தொன்மையானது என்பதைப் பறைசாற்றுகின்றது. சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பு மூன்று சித்தர்கள் ஒட்டு சுட்டான் என்ற இடத்திலிருந்து பிரிந்து சென்றனர். அவர்களில் முதலாவது சித்தர் ஒட்டுசுட்டானுக்கு தென்மேற்கில் வாவெட்டி மலையில் அமர்ந்து சமாதியடைந்தார். இரண்டாவது சித்தர் ஒட்டுசுட்டானுக்கு தெற்கே உள்ள சம்மங்குளத்தில் சமாதியடைந்தார். மூன்றாவது சித்தர் ஒட்டு சுட்டானில் ஒரு கொன்றை மரத்தின் கீழ் இருந்து சமாதியடைந்தார். இவர்கள் சமாதி அடைந்த இடங்களில் பிற்காலத்தில் சிவலிங்கம் தோன்றியது என்று கூறுகின்றனர்.

யாழ்ப்பாணம் இடைக் காட்டைச் சேர்ந்த வீரபத்திரர் என்னும் சைவவேளாளரும் அவருடைய சந்ததியினரும் ஒட்டுசுட்டானில் குடியேறி, காடு வெட்டி துப்புரவு செய்து குரக்கன் பயிரிட்டு வரும் நாளில், குரக்கனை வெட்டி எடுத்த பின்னர் குரக்கன் ஒட்டுகளை வெட்டிக் குவித்து நெருப்பு வைப்பர். அப்படி ஒரு நாள் நெருப்பு வைத்த போது, கொன்றை மரத்தடியில் ஒட்டுகள் எரியாமல் இருப்பதை அவதானித்த வீரபத்திரர் ஒட்டுக்களை எப்படியாவது எரிக்க வேண்டும் என்ற ஆவலால் மண்வெட்டியால் அவ்விடத்தை வெட்டிய போது அவ்விடத்தில் உதிரம் கசிவதைக் கண்டு திகைத்து, இந்நிகழ்வை அப்போது அப்பதியை ஆட்சி புரிந்த வன்னியனிடம் செப்பினார். வன்னியனும் குறிப்பிட்ட இடத்தை கண்ணுூற்று, அவ்விடத்தில் பிள்ளையார் கோயில் அமைத்து வழிபடுமாறு பணித்தான். சிலகாலம் சென்ற பின்பு சிவலிங்கம் தானாக தோன்றி காட்சியளித்தது. அன்று தொட்டு குரக்கன் ஒட்டு எரிந்த இடம் ஒட்டுசுட்டான் என்றும் அவ் விடத்தில் எரியாது மறைந்திருந்த தான்தோன்றி இலிங்கத்தை **“வேகாவனேசுவரர்”** என்றும் **“வேகாவனப் பெருமான்”** என்றும் கூவிப் போற்றினர்.

### மூர்த்தி, தலம், தீர்த்தம்

| | |
|---|---|
| **இறைவன்** | - **வேகாவன முடையார் (சுயம்பு மூர்த்தி)** |
| **இறைவி** | - **பூலோக நாயகி** |
| **தலவிருட்சம்** | - **கொன்றை மரம்** |
| **தீர்த்தம்** | - **இயற்கையாக உருவான குளம்.** |

### இறைவனின் சிறப்பு

மூர்த்தி சிறிது எனினும் அதன் கீர்த்தி பெரிது என்பர். இதற்கிணங்க இங்கு சுயம்பாக எழுந்தருளியுள்ள மூர்த்தியின் அருளாட்சியின் செயல்கள் வியப்பானவை. ஒரு முறை கருவறையில் சுயம்பாக உள்ள இலிங்கத்திற்கு ஆவுடையார் பகுதி இல்லை என்ற காரணத்தினால் ஆலய பரிபாலனர் இந்திய சிற்பியை அழைத்து ஆவுடையார். கல்லொன்றைப் பொழிவித்து இட்டனர். இறைவன் சித்தம் அதற்கு மாறாக இருந்தது, தனக்கு ஆவுடையார் தேவை இல்லை. **“தோன்றிய வடிவிலேயே விடுக”** என்று அசரீரியாக கூறிவிட்டார்.

ஒரு முறை கோயிற் திருப்பணிக்காக கொண்டு வரப்பட்ட சீமெந்துப் பீப்பாக்கள் கோயில் மரத்தடியில் இறக்கி வைக்கப்பட்டிருந்தது. அன்று இரவு கனமழை பொழிந்ததால் சீமெந்துப் பீப்பாக்கள் பாதுகாப்பான இடத்திற்கு நகர்த்தப்பட்டிருந்தன. இச்செயலை யார் புரிந்தார்கள் என்று திகைத்து நின்ற பொழுது கோயில் அர்ச்சகருக்கு ஈசன் கனவில் தோன்றி **“சீமெந்துப் பீப்பாக்கள் உருட்டியதால் என்னுடல் வலிக்கின்றது. எனக்கு வெந்நீர் அபிஷேகம் செய்”** என்று கூறியதைக் கூறி வேகாவனப் பெருமானுக்கு வெந்நீர் அபிசேகம் செய்வித்து ஈசனின் பெருங்கருணையை நினைத்துப் பேரின்பம் அடைந்தனர்.

### பத்தி இலக்கியங்கள்

ஒட்டுசுட்டான் தான் தோன்றீச்சரர் மீது பல பத்திப்பாடல்கள் பாடப்பட்டுள்ளன. கொக்குவில் குகதாசர் ச.சபாரத்தின முதலியார் பாடிய ஒட்டு சுட்டான் சிவபெருமான் ஆசிரிய விருத்தமும் (1883), சுதுமலை பண்டிதர் ஆ. சி நாகலிங்கம் பாடிய திருவூஞ்சல் பதிகம் மற்றும் பெயர் தெரியாத புலவர் ஒருவர் பாடிய ஊஞ்சல் பதிகம் ஒன்றும் இப் பத்திப் பாடல்களில் அடங்குகின்றன. இறுதியாகக். குறிப்பிட்ட ஊஞ்சல் பதிகத்தின் காப்புச் செய்யுளில் ஒட்டு சுட்டான் சுயம்பு மூர்த்தி **“தேவர்பதி”** என்று போற்றப்பட்டுள்ளது.

தான்தோன்றீச்சரர் வேட்டைக்குச் சென்று திரும்பியபோது பூலோக நாயகியார் ஊடல் கொண்டு கதவைப் பூட்ட இருவருக்குமிடையே நடைபெறும் தர்க்கம் போல அமைந்துள்ள ஒரு வசன கவிதை, தற்போதும் பத்தியோடு வேட்டைத் திருவிழாவின் போதும் படிக்கப்பட்டு வருவது மரபாகும்.



சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு

### பூசையும் திருவிழாவும்

இக்கோயில் சிவாகமம் தழுவிய அமைப்பாக இருப்பதால், தினம் தோறும் மூன்று காலப் பூசைகள் இடம்பெற்று வருகின்றன. மற்றும் பிரதோசம், சிவனிரவு, திருவாதிரை விரதங்களும், திருவாசகம் படித்தல், திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி பாடல் என்பனவும் நடைபெற்று வருகின்றன.

இக் கோயில் திருவிழா ஆனித் திங்கள் மறைமதியில் கொடியேறி, பௌர்ணமியில் தீர்த்த உற்சவத்துடன் 12 நாட்கள் நடைபெறும். 13 ஆம் நாள் வேட்டைத் திருவிழா நடைபெறும். இத் திருவிழா ஒரு மரபு ரீதியான வழிபாட்டை வழிப்படுத்துவதாக அமையும். இவ் வேட்டைத் திருவிழா நடைபெறும் பொழுது தீராத நோயால் பீடிக்கப்பட்டவர்கள் வேடனாக வேடமிட்டு வருவதை நேர்த்திக் கடனாக நிறைவேற்றுவர். இதில் 500 மேற்பட்டவர்கள் வேடர் வடிவம் தாங்கி திருவிழாவில் கலந்து கொள்வர் இவ் வேடுவர்களுக்கெல்லாம் தலைவனாக சிலாவத்தை ஊரைச் சேர்ந்த பரம்பரையினரில் ஒருவர் பதவி வகிப்பார். வேட்டைத்திருவிழா நடைபெறும் போது வேடர்கள் குழுமி நிற்பர். வேட்டை வசன கவிதை படிக்கப்பட்ட பின்னர் அவர்கள் சுவாமியை விழுந்து வணங்கி, உடைகளை நீக்கி, நீராடி விரதத்தை நிறைவு செய்வர்.

### கோயில் சொத்துக்களும் பரிபாலனமும்

வன்னி அரசர்களாலும், வணிக பெருமக்களாலும் கறை துறைப்பற்று, மேற்பற்று, ஆகிய பகுதிகளில் தானம் செய்யப்பட்ட நெல்வயல் நிலங்களும், தென்னந் தோட்டங்களும் இவ் ஆலயக் காணிகளாவும் அதிலிருந்து கிடைக்கும் வருமானங்கள் ஆலய பரிபாலனத்திற்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தற்போதும் ஆலயத்திற்குச் சொந்தமான வயல் காணிகள் பொதுமக்களின் பொருளாதார விருத்திக்கு உதவி வருவதோடு. கோயில் நிதியிலிருந்து பொதுமக்களுக்கு கடன் உதவிகள் புரிந்து வரும் வழக்கமும் இருந்து வருகின்றது. இதற்கான சான்றுகள் கோயில் ஏட்டுப்பிரதிகளில் காணப்படுகின்றன.

கோயில் கட்டுமானம் தொடர்பாக பல நம்பிக்கை கதைகளும் கூறப்பட்டு வருகின்றன. ஈழத்தின் இடைக் காலச் சிவன் கோயில்களில் ஒட்டுசுட்டான் தான் தோன்றி சிவன் கோயிலும் ஒன்று. இக்கோயில் சோழர் காலத்தில் கட்டப்பட்ட தென்றும். குளக்கோட்டன் திருப்பணி புரிந்த தென்றும் கூறும் செய்திகள் உண்மைக்குப் புறப்பான கட்டுக் கதைகள் ஆகும்.

ஆலயம் சோழர் காலத்திற்குரியது என்பதற்கான தொல்பொருட் சின்னங்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. என்பதாலும் குளக்கோட்டனுக்கும் இவ் ஆலயத்திற்கும் உள்ள தொடர்பு பற்றி எந்த ஒரு இலக்கியக்கியங்களும் குறிப்பிடாத காரணத்தினால், இக்கூற்றுகள் பொய்ப்பிக்க தக்கது.

வடக்கு இலங்கையில் சைவமும் தமிழும் நிலைத்து வாழும் பூமியில் எண்ணற்ற சிவாலயங்கள் பெயர் பெற்று விளங்கினாலும் ஈசன் தான்தோன்றி வடிவில் ஒட்டுசுட்டான் பதியில் தோன்றி அருள்பாலித்து வரும் சுயம்பு இலிங்கக் கோயிலாகச் தனிச் சிறப்புப் பெற்று விளங்குகின்றது.

**“தூய விமானமுந் தூலம தாகுமால்**
**ஆய சதாசிவ மாகுநற் சூக்குமம்**
**ஆய பலிபீடம் பத்திர லிங்கமாம்**
**ஆய அரனிலை ஆய்ந்துகொள் வார்கட்கே”**
(திருமூலர் அருளிய திருமந்திரம்)

திருச்சிற்றம்பலம்




**Siva P.Ketharan**
English Editor – Thennadu
Thennadu Tamil Atheenam (Madam) – Australia
+61 49949 3300, ketharan@thennadu.org



# Sydney Tamil Pongal Festival 2024

On the 21st of January 2024 over 60 organisations got together and held a vibrant Pongal festival celebrated with over 2500 people. This event took weeks of coordination and preparation which required the teamwork of dozens of people to hold such a successful event. Not only was this event a day to celebrate the auspicious day of Thai Pongal but it was a day that marked the beginning of a new and stronger bond between the large Tamil community that call Sydney their home. As I took part in the preparation of this event I observed the power of our Tamil community and what they can do when they work as one, every problem had a solution and every individual had a role and a benefit they could provide. I believe that this Pongal event will be continued annually through the hard work of all involved and will serve as a symbol of unity and solidarity which showcases the strength of our Tamil community.

The success of this event was the result of weeks of preparation and coordination and despite any setbacks, the shared commitment to preserving and showcasing the glorious Tamil Culture acted as a fuel that powered all those involved to solve these issues and hold such a flawless event. Everyone involved in the conduction of this event should be applauded and recognised for their collaborative spirit and for working tirelessly to deliver such a memorable day for thousands who all would have walked away learning something new.

The impact of this event on the lives of many should not go unnoticed, especially on the younger generation. As a youth myself, I can confidently say I have learnt so much from this event and wish to help further organise this in the future. Further, I can assure you that every young person who came on the Day would have walked away with new insights into Tamil culture and a sense of enjoyment from the day. In addition, the prevalent youth involvement in the event through the inclusion of University Tamil organisations such as UNSW's Anjali Society and Macquarie University Tamil Sangam with an array of performances conducted by young children from Tamil schools would have also had a lasting impact on them which creates a strong foundation for the future of the tamil community in Sydney.

Lastly, the unity displayed on that day and the days leading up to it was unprecedented, as Tamil groups from various countries, including Sri Lanka, India, Malaysia, Singapore, and more, came together and stood united on one street. This gathering transcended national boundaries and emphasised the common love and connection for Tamil culture that unites our community irrespective of the national background. I hope this event acts as a message to more Tamils around Sydney and all over the world to come together and embrace their love for Tamil and celebrate as one rather than divided.

In its essence, this year's Sydney Pongal Festival will not only be remembered as a celebration of cultural heritage but also as a symbol of unity, the growth of Sydney's Tamil community and a testament to the strength that emerges when our community unites for a common cause. This event has showcased the spirit of the Sydney Tamil community and their commitment to preserving and promoting their cultural identity and I look forward to the continuation of this event in the years to come.

அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு

# Miracles of Saiva Saint Thirugnanasampanthar Swamikal




Siva P.Abiram SG

Thirugnanasampanthar was a Saiva poet/saint, who lived in the seventh century CE.He is one of the most prominent saints amongst the 63 Nayanars. Sampathar's entire collection of hymns about Lord Shiva is called "Thirukkadaikappu''. These were later collected to form the first three volumes of the Thirumuraikal – one of the principle texts for Saiva Sithantham philosophy.

After Sambanthar had finished worshipping the temples of the Pandiya region, Sambanthar came to the bank of the river Mullaiyar in Thirulkollampoothoor. On the northern bank of the river there was a temple known as Vilvaranyeswarar temple, this east facing temple has two corridors and its main tower has 5-tiers. This ancient temple is situated on the bank of the river (Mullaiyar), a tributary of the river Cauvery. As per stone inscriptions, this temple was built by Chola Kings Kulothungan-III and Rajarajan-III.

Sambanthar wanted to worship this temple, however the river was very flooded. Sambanthar found a local boat that had been



tied up due to the flood and untied it, letting the devotees get into it, he was relying on the oars of his hymns to paddle them across the river. He sang the hymn beginning with the words "Kottame Kamalum", which goes as follows:

கொட்டமே கமழும் கொள்ளம்பூதூர்
நட்டம் ஆடிய நம்பனை உள்கச்
செல்ல உந்துக சிந்தையார் தொழ
நல்குமாறு அருள் நம்பனே

Kottame kamalum kollampoothoor
Nattam Aadiya Nampanai ulkach
Sella unthuka sinthaiyar thola
Nalkumaaru Arul nampane

In English this translates to, meditate upon Sivan who danced in Kollampoothoor where the costus root spreads its fragrance. Sivan who is capable of granting us your grace, we worship you in our minds! Let this boat be propelled to reach the opposite bank to enable us to worship him in person also.

By the grace of Sivan, the boat gently glided to the other shore. Then, Sambanthar and the devotees got of the boat, went to the temple and prayed to Sivan

To be continued...

# பெருஞ்சாந்தியின் பின்னர் புதுப்பொலிவுடன் நயினையம்பதி நாகபூசனி அம்மன் திருக்கோயில்





















# சைவ ஆலயப் பூசைகள் மற்றும் ஓமங்களும் தமிழிற் செய்யலாம்

# மரபுவழி ஆதரத்துடனான விளக்கம்

**மன்னுமாமலை மகேந்திரமதனில்**
**சொன்ன ஆகமம் தோற்றுவித்தருளியும்** - திருவாசகம்

தமிழே உலகின் மூத்தமொழி, அதில் வழிபாட்டு கூறுகள் நிறையவே உண்டு. காலஓட்டத்தில் அழிந்திருக்கலாம், அவற்றில் சிலவே தற்போது உள்ளன என்று திடமாக சிந்தித்து செந்தமிழ் ஆகம முறையில் வழிபாடுகள், கிரிகைகள் போன்றவற்றை முன்னெடுப்பதே தென்னாடு சிவமடத்தின் தலையாய நோக்கமாகும். தமிழ் வழிபாட்டிற்கு மறுப்பாக, ஆழம் அறியாமல் பொதுவெளியில் வெளியிடப்படும் கட்டுரைகளுக்கு மரபு வழி நின்றே மறுப்புகளை தரவேண்டும் என்ற நோக்கத்திற்காக இந்த கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

**சைவாலயப்பூசையும் ஓமங்களும் தமிழிற் கூடாதா?**

சைவாலயப்பூசைகள் வடமொழியிற் மட்டுமே இருத்தல் வேண்டும் என்பதைக் கம்பவாரிதியார் நியாயஞ் செய்து கட்டுரையொன்றினை ஊடகத்தில் வெளியிட்டுள்ளார். வேதங்களையும் சிவாகமங்களையும் தமிழ் வழிபாட்டினால் ஒழிக்கின்றனர் என்பது அவருடைய கவலை. ஐசுவரிய இலக்குமி கோயில் கட்டி, அதில் சிவலிங்கத்தை மேல்மாடியில் வைத்து மூலவராக ஐசுவரிய இலக்குமிக்கு வழிபாடுகள் உருவாக்கி, கோயிலில் இடம் இல்லாததால் தென்முகக்கடவுளை வேறொரு திசைநோக்கி வைத்து, அதனையும் நியாயஞ் செய்து, நாவலர்பெருமான் நித்தியகருமவிதியில் சிவசூரியத்தோத்திரங்கள் இரண்டினை தமிழ்ப்புராண நூல்களில் இருந்து தந்துதவியிருக்கும்போதும், அவற்றைவிடுத்து, **"ஆயிரங் கரங்கள் நீட்டி"** என்னும் கர்ணன் திரைப்படத்தில் வந்த கவிஞர் கண்ணதாசனின் பாசவாக்கியப்பாடலை, பதிவாக்கியம் மட்டுமே பயன் படுத்தவேண்டிய கோயில் பூசையில் உட்புகுத்தி செய்துவரும் சிவாகமவிரோதங்கள் ஏராளம். இலக்குமிக்கு மகேசுவரத் தத்துவத் தென்முகக்கடவுளும் சதாசிவத்தத்துவ சிவலிங்கப் பெருமானும் பரிவாரங்களாக்கி சிவாகமத் தத்துவத்தையே சீர்கெடுத்துவிட்டு, சிவாகமப்போதனை வியப்பாகவுள்ளது. சோதிடசாத்திரத்தைக் கைவிட்டுத் தனக்கு உகந்த நாளிற் திருக்குடமுழுக்கை வைத்துவிட்டு, இன்று ஆறங்கம் நால்வேதம் போற்றவேண்டும் என்னும் திரிபுவாதம் நகைப்புக்குரியதே! எனினும் உண்மைச் சைவர் தெளியும் பொருட்டு விளக்கம் கொடுக்கவேண்டியது எளியேன் கடன்! சுமார்த்தமத இந்துத்துவத்தின் வடமொழியே தேவமொழி என்னும் கோட்பாட்டிற்கு தமது அன்பினை வெளிக்காட்ட அப்பெரியார்பூண்டுள்ள வேதாகமக்காவலர் வேடம் சைவர் தெளிந்துகொள்ளவேண்டியது காலத்தின் தேவையாகும். கதிர்காமத்தம்பி மகேந்திரன் என்பார் அவருடைய இணையப்பக்கத்தில் **"ஐசுவரிய இலக்குமி கோயில் சிவாகமப்படி நிர்மாணிக்காதது ஏன்?"** என்று கேட்ட கேள்வி ஒன்றுக்கு, **"ஓரிரண்டு ஆகமங்களே நம் கைக்குக் கிடைக்கின்றன.எல்லா ஆகமமும் கிடைக்காதவரை எந்த ஆலயம் ஆகமமுறைப்படி அமைக்கப்பட்டது, எந்த ஆலயம் ஆகமமுறைப்படி அமைக்கப்படாததென்று எவராலும் சொல்லமுடியாது. ஆகமமுறைப்படி அனைத்தும் நடப்பதென்பது இனிவரும் காலங்களில் கடினமான விடயமே."** என்று கூறிய இப்பெரியாரிடம் தமிழ்வழியில் வழிபடவேண்டும் என்பவர்களும் இதேபதிலைக் கூறி அப்பெரியாருக்குத் தக்கபதில் கொடுத்துவிடலாம் எனினும், சைவசமய மரபைப் போற்றும் நம்போன்றோர் உலகார் பொருட்டு உரியபதில் அளித்தல் கடன்.

திருஞானசம்பந்தப்பெருமான் முதலிய நாயன்மார்கள் வேதம், வேதவேள்வி, வேதநெறி என்ற சொற்பதங்களைப் பயன்படுத்தி அருளியுள்ளனர் என்பதைச் சைவ உலகு அறியும். எனினும், சைவப்பெரியோர் பலரும் பல்வேறு இடங்களில் திருமுறைகளுக்கு உரைசெய்துள்ளபோது **"வேதம்"** என்பதற்குப் பலபொருள் கொண்டுள்ளனர். அதாவது திருமுறையில் சில இடங்களில் வடமொழி வேதங்களையும் சில இடங்களில் வேதாந்தமாகிய உபநிடதங் களையும் சில இடங்களில் சிவாகமத்தையும் சில இடங்களில் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்மறைகளையும் குறிப்பதாக வேதம் என்னுஞ் சொற்பதம் திருமுறைகளில் புழக்கத்தில் உண்டு என்பதுதான் சைவ ஆன்றோர் வாக்கு. மேலும்,

அத்தியாச்சிரம சுத்தாத்துவைத வைதிக சைவசித்தாந்த ஞானபானு பாம்பன் சிறிமத் குமரகுருதாச சுவாமிகள் தமது திருப்பா நூலில், **"வேதா"** என்ற தலைப்பில் பதிகம் ஒன்றினை அருளிப்பாடியுள்ளார். அதற்கு உரையெழுதியவர் சிவாகமங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் பணியில் ஈடுபட்ட, மயவிஞ்ஞான கலாநிதி, பேராசிரியர், கலாநிதி S.P.சபாரத்தினம் ஆவார். இப்பெரியார் வேதா என்பதற்கு **"இறைப் புலவ!"** என்றே விளக்கவுரை அளித்துள்ளார். **"வேதா - வேதஸ். வேதஸ் ஸ்ரீ புலவன் நிகண்டு - பரியாயார் ணவங் காண்க. நிரந்தர வேதா ஸ்ரீ எஞ்ஞான்றுமுள்ள புலவன்; அவனிறைவன்னென்க."** என்று விளக்கியுள்ளார். எனவே, வேதன் என்பதற்கு புலவன் என்னும் பொருளும் உண்டென்பதறிக. அறிவென்ற பொருளும் உண்டென்று உணர்க.

வேதம் என்று திருமுறைகளில் புழகும் பல்வேறு இடத்தில், வேதம் என்பது சிவாமங்களையே குறிக்கும் என்று சைவப்பெரியோர் உரைசெய்துள்ளமைக்குக் காரணம், சிவாகமங்களில் காமிகாகமம் **"சைவமே வைதிகம் எனப்படும் வைதிகமே சைவம் எனவும் படும்"** என்று வலியுறுத்துவதினா லாகும். நாவலர்பெருமான் , பெரியபுராண சூசனத்தில் இக்காமிக ஆகம வசனத்தை உதாரணம் காட்டி சைவாகமமே வைதிகம் என்று சாதித்தருளுகின்றார். மேலும்,

சைவாலயங்களில் செய்யப்படும் வேள்வி சிவாகம வேள்வியேயொழிய வைதிகவேள்வியன்று. அதாவது சிவாக்கினியாகும். வேதவிதிப்படியான வேள்வி வைதிகாக் கினி என்றும் வேதவேள்வியென்றும் பொதுவில் அறியப் படும். பூர்வ காமிகாகமம் , அக்னிகாரிய விதிப்படலத்தில் **"சிவாகம மந்திரங்களை மட்டுமே கொண்டுசெய்யும் சிவாக்கினியே உத்தமம் என்றும், சிவாகம மந்திரங்களுடன் வேதமந்திரங்களைக் கொண்டுசெய்யும் சிவாக்கினி மத்திமம் என்றும், வேதவிதிப்படியான வைதிகாக்கினி அதமம்"** என்றும் கூறப்பட்டுள்ளது. எனவே, வேதவேள்வி என்று திருமுறைகளில் புழகும் இடத்தில் அவை, சிவாக்கினியாகிய சிவாகமவேள்வியையே குறிப்பிடுவதாக சைவசமயம் கொள்ளும். அங்ஙனம் கொள்ளாவிடத்து, திருமுறைகள் சிவாகமங்களுக்கு முரணாக, வைதிகாக்கினியினை வளர்க்கச் சொல்வதாகவே முடிவுறும்.

**"வேதவேள்வியை நிந்தனை செய்துழல்"** என்பதற்கு வைதிகவேள்வியென்று பொருள்கொண்டால், தக்கன் செய்த வைதிகவேள்வியையும் தாருகாவனத்து முனிவர் செய்த வைதிக வேள்வியையும் சிவபெருமான் அழித்துத் தண்டித்ததையும் திருஞானசம்பந்தப்பெருமான் கண்டித்தார் என்றே பொருளடையவேண்டிவரும். சுமார்த்தமதத்தாரும் வைணவரும் வளர்க்கும் வேள்வியைத் திருஞானசம்பந்தர் கொண்டாடினார் என்றும் இடரடையவேண்டிவரும். **"வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்க"** என்பதில் வேதநெறி என்பது வடமொழி வேதங்களை ஏற்ற நெறி என்று பொருள்கொண்டால், திருஞானசம்பந்தப் பெருமான் வைணவம் சுமார்த்தமதம் எல்லாம் தழைக்கவே தோன்றினார் என்று பொருளாகும். சைவநெறி தழைத்தோங்க வும் சரியை,கிரியை,யோகம்,ஞானம் என்னும் நாற்பாதங்கள் விளங்கவுமே திருஞானசம்பந்தப்பெருமான் தோன்றியருளி னார் என்பதுதான் இதன் பொருளாகும். திருமுறைகளுக்குப் பொருள் காணும்போது சிவாகமங்களையும் சிவாகமங் களுக்குப் பொருள்காணும்போது திருமுறைகளையும் சிந்திந்து, ஒன்றுக்கு ஒன்று மாறுபடாதவகையிலேயே பொருள் கூறுதல் வேண்டும். இந்தச் சைவமரபில் எள்ளளவும் அனுபவம் இல்லாது திருமுறைகளில் கூறப்பட்டுள்ளது வைதிகாக்கினியே என்று சாதித்துள்ளார் கம்பவாரிதியார். வைதிகாக்கினி காமியப்பலன் மட்டுமே தரவல்லது என்றும், சிவாக்கினியே காமியப்பலனையும் முத்தியையும் கொடுக்க வல்லது என்றும், வைதிகாக்கினி முத்திக்குத் தடையென்றும் நாவலர்பெருமான் பெரியபுராணசூசனத்தில் விரிவாகவே விளக்கியுள்ளார்.

**"வேதத்துள் விதித்த வேள்வி முதலியனவெல்லாம் அநித்தியமாகிய காமியங்களைப் பயப்பன என்பதும் பெறப்பட்டன. வேள்வி முதலியன ஞானத்தைப் பயவாமை மாத்திரமேயன்றி, தீவினைபோல அது நிகழவொட்டாது தடைசெய்து நிற்றலும் உடையனவேயாம்.ஆதலால், தீவினைகள் இரும்பு விலங்கும், வேதத்துள் விதிக்கப்பட்ட வேள்வி முதலியன பொன்விலங்கும் போலத், தம்முட் சமப்படுத்து உணர்தற்பான்மையவென்க".**

- நாவலர்பெருமான் (பெரியபுராண சூசனம் - உபோற்காதம்).

திருமுறைகளில் வரும் வேதவேள்வி என்பது சிவாகம வேள்வி குறித்தேயாகும் என்பதைச் சைவர்கள் நன்றே நினைவிற் கொள்க! அதுவே நாவலர் முதலியோர் விளக்கிய மரபுமாகும்.

கம்பவாரிதியார் திருமந்திரத்தின் உட்கிடக்கையையும் உணராது தம் கருத்துக்கேற்ப சாதித்துப் பிறழ்ந்துள்ளார். எனவே, பின்வரும் திருமந்திரப்பாடல்களைச் சைவச்சான் றோர் வழி பொருளறிதல் அவசியம்.

**வேதத்தை விட்ட அறம்இல்லை வேதத்தின்**
**ஓதத் தகும்அறம் எல்லாம் உளதர்க்க**
**வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற**
**வேதத்தை ஓதியே வீடுபெற் றார்களே** - திருமந்திரம்

**வேதமொ டாகமம் மெய்யாம் இறைவன்நூல்**
**ஓதும் பொதுவும் சிறப்பும் என்றுள்ளன**
**நாதன் உரைஅவை நாடில் இரண்டந்தம்**
**பேதம தென்னில் பெரியோர்க்கு அபேதமே** - திருமந்திரம்

சிவாகமத்தினால் விளையும் ஞானத்தினாலேயே முத்தியென்னும்போது வேதத்தினால் வரும் முத்திக ளெல்லாம் அபரமுத்தி எனப்படும். பௌத்த சமண நூல்களினாலும் முத்தி உண்டென்றும் அவையெல்லாம் அபரமுத்தியே என்றும் சைவம் ஏற்றேயுள்ளது. வேதம் பொதுநூல் என்று கூறப்படுவது பல்வேறு சமயத்தவரும் அதனை உரிமைகொண்டாடுவதால் அன்று. மாறாக, பொது அறங்களைப் போதிப்பதினாலே யேயாகும். அந்தப் பொது அறங்களால் அபரமுத்திகளே வாய்க்கும். சிவாகமம் சிறப்புநூல் என்று போற்றப்படுவது சிவ அறம் என்னும் சிறப்பு அறத்தினைப் போதிப்பதாலேயேயாகும். உருத்திர பசுபதி நாயனாரும் திருவுருத்திரத்தினை ஓதும்போது கழுத்தளவு நீரில் நின்று ஓதிய அவருடைய சிவபத்தித்திறத்தினா லேயே முத்தி பெற்றார் என்று நாவலர் பெருமான் பெரியபுராண சூசனத்தில் விளக்கியருளியுள்ளார். அதாவது உருத் திரபசுபதி நாயனார் சிவ அறத்தில் உயர்ந்து நின்றார் என்பதுதான் பரமுத்திக்குக் காரணமாகும். அங்ஙனம் கொள்ளாது, திருவுருத்திரமே பரமுத்தியினைக் கொடுத்தது என்று பொருள்கொண்டால், சாக்கியநாயனா ருக்குக் கல்லே முத்தி கொடுத்ததென்றாகும். இந்த இடர் வந்துவிடக்கூடாதென்பதில் தெய்வச்சேக்கிழார்பெருமான் கொண்டிருந்த சிரத்தையை, நாவலர்பெருமான் பெரியபுராண சூசனத்தில் விளக்கிய பாங்கு சைவராற் கொண்டாட வேண்டியவொன்று. **"பிரமமீமாஞ்சைக்கு நீலகண்ட சிவா சாரியார் இயற்றிய பாஷ்யத்தில் "வேதசிவாகமங்களுக்குப் பேதங் காண்கின்றிலம், வேதமே சிவாகமம்" என்று கூறப் பட்டது, வேதங்கள் சிலவிடத்துச் சிவசாத்திரப் பொருளைச் சிரசிலே தாங்கி இருத்தலால், வேதமே சிவாகமம் என்று உபசரிக்கப்பட்டது".** என்றும், **"சௌரசங்கிதையிலே"**

**"ஆகமத்தைப் பற்றிக்கொண்டன்றோ சிலபுராணங்கள் சிலசில இடங்களில் பிரத்தியட்சமாக வேதத்துக்கு விருத்த மாகிய பொருளைக் கூறுகின்றன" என்று சொல்லியபடியே சைவாகமம் வேதவிரோதப்பொருள் கூறுதலும், சாமானிய வேதத்தைக் குறித்து விசேஷ வேதமாயிருத்தலாலேயாகும்."** என்றும்

நாவலர்பெருமான் பெரியபுராண சூசனத்தில் எழுதியது திருமந்திரத்தில் கூறப்பட்டுள்ள இருநூலும் அபேதம் என்பதின் உண்மைப்பொருளை நன்றே விளக்கும். அங்ஙனம் அல்லாதொழியின், பொதுவென்றும் சிறப்பென்றும் கூறப்படவேண்டிய அவசியம் இல்லாதொழியும். மேலும், நாவலர்பெருமானே வடமொழி வேதங்களைச் சாமானிய வேதம் என்றும் சிவாகமங்களை விசேஷவேதம் என்றும் எழுதியருளியிருப்பதைச் சைவர் தெளிந்தால், வேதம் என்று திருமுறைகளில் துலங்கும் இடமெல்லாம் வடமொழி வேதங்கள்என்றேதனித்துப்பொருள்கொள்ளமுடியாவென்பது விளக்கமுறும்.

**"வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது நாதன் நாமம் நமச்சிவாயவே" என்ற செய்தியைத் திருஞானசம்பந்தப் பெருமான் யாருக்குக் கூறவேண்டியிருந்தது என்பதைச் சிந்தித்தாலே சில உண்மைகள் புலப்படும். சமணருக்கோ பௌத்தருக்கோ அங்ஙனம் கூறவேண்டிய அவசியமில்லை. எனவே, வேதத்தை ஏற்று வேதக்கிரியைகள் செய்து வாழ்ந்த போதும் சிவபரத்துவத்தை ஏற்காத வைதிகமதத்தர்பாலே திருஞானசம்பந்தர் இவ்வாறு அழுத்தமாகக் கூறியுணர்த்த வேண்டிய தேவையிருந்தது. இதனை அவருடைய உபநயனச் சடங்கிலும் பெரியபுராணத்தினூடாகக் கண்டு தெளியலாம். உபநயனத்தின்போது காயத்திரி மந்திர உபதேசம் செய்யப் படுவது வழக்கு. அதில் பர்க: என்னும் நாமம் சிவநாமமே யாகும். ஆனால் சிவபரத்துவம் ஏற்காத வைதிகமதத்தர்கள் அங்ஙனம் பொருள்கொள்வதில்லை. இன்று இலங்கையில் உள்ள பல வைதிகப்பிராமணரும் அவ்வாறு உழல்வது கண்கூடு. தமக்கு காயத்திரி மந்திர உபதேசஞ் செய்ய வந்தவரிடம் "செந்தழ லோம்பிய செம்மை வேதியர்க் கந்தியுள் மந்திரம் அஞ்செ ழுத்துமே"** என்று திருவைந்தெழுத்தே சந்தியாகாலங்களில் கணிக்கவேண்டிய முதன்மையான மந்திரம் என்று அருளிச்செய்தார்கள். "முந்தை முதல் மந்திரங்கள் எல்லாம் தோன்றும் முதல் ஆகும் முதல்வனார் எழுத்து அஞ்சு என்பார் அந்தியின் உள்மந்திரம் அஞ்செழுத் துமே என்று அஞ்செழுத்தின் திருப்பதிகம் அருளிச்செய்தார்" என்று தெய்வச்சேக்கிழார்பெருமான் அருளிச்செய்துள்ளார். உத்தர காமிக ஆகமும் **"வைதிக அனுட்டானத்தினைச் செய்யாதும் இருக்கலாம், சைவ அனுட்டானம் அந்தணர்க்கு கட்டாயமானது"** என்று வலியுறுத்துவதும் இவ்வுண்மை யினை உணர்த்தும். எனவே, திருமுறைகளில் வடமொழி வேதங்களாய் சிவபெருமானே விளங்குகின்றாரென்று பல் வேறு முறைகளில் திருஞானசம்பந்தப்பெருமான் முதலிய நாயன்மார் வலியுறுத்திக் கூறியது, **"வைதிகப் பிராமணருக்கு"** அறிவூட்டி, அவர்களையும் சைவசமயிகளாக்கும் பொருட்டே யாகும். பிறமத நூல்களையும் பிறமதங்களையும் சிவபெரு மானே உயிர்களின் பக்குவத்திற்கு ஏற்ப அனுபவித்து சைவநெறி சாரும்பொருட்டு அருளிச்செய்தார் என்று திருமுறைகள் கூறுவது சிந்திக்கவேண்டியவொன்று! எனினும் அம்மத நூல்கள் சைவத்துக்குப் பிரமாணமாகா! அவ்வாறே, வடமொழி வேதங்கள் பொதுப்பிரமாணம் என்னும் அளவில் நின்றுவிடும்!


கட்டுரைக் கருத்துக்கள் எழுத்தாளருக்குரியது.

சைவ ஆலயப் பூசைகள் தொடரும்...



**வைத்தியக் கலாநிதி**
**கி.பிரதாபன்**
**தலைவர் - இலங்கை**
**சைவநெறிக் கழகம்**

# Discussion with other children



Last month Summary:

Sivakan , a 7 year old kid, came back home from the temple festival with kith and kin. All the neighborhood children had come to him to see what toys he brought home from the festival fair. One of the toys he brought home was a toy aeroplane, he asked the neighborhood children, “Accepting that the aeroplane is made by some one, is it not logical to ask who must have created the mountains, river, earth etc. in the world?”

Next day my friends came to our house for playing. One of them was very sad. I asked him the reason for his sadness. He said, “We planted some lablab seeds in our backyard. It germinated and grew to be a creeper. But yesterday it wilted and the creeper died!” “Did you water it properly?” I asked. He said, “We looked after it properly. But my father told me that it must have withered because of yesterday’s excessive fog.”

‘It did not happen because of us. It germinated; lived for sometime and died. Who must have caused all these?’ ‘Why is somebody else necessary to cause it? Can’t it happen on its own?’ was his doubt.


This discussion reminded another boy of a similar incident that happened in his house.He said, “We have a cat in our house. It mothered four kittens. All of them survived for two days. But yesterday two kittens disappeared. It is so surprising to know that the mother cat itself ate them up.” ‘OK. The kittens were born, survived for sometime and then died! Who must have been responsible for this incident?’

Meantime another boy who was following the discussion exclaimed, “Oh, is it the same case with the old lady who passed away yesterday, in our neighborhood?” ‘Absolutely true. No doubt about it at all. Everything in this world, whether inert objects or living beings, go through these three states. They come into existence, are sustained for sometime and die ultimately. Who causes all these changes to happen? I raised a question.

The children could think no further. They changed the subject altogether. With that we called it a day without any further discussion.

Saiva Philosophy Reference: The takeaway of this story is, that which is born in this world, will sustain life and ultimately die as the body or physical attribute of soul will be taken away at some point of time.

# நல்லைநகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேல்





சிவ.யதோட்சயன் மங்களேச்வரன்
தரம் 11,
யாழ் மத்திய கல்லூரி

### இளமை வாழ்க்கை

இந்தியாவிற்குள் வந்த இடச்சுக்காரருக்கும் ஆங்கிலேயருக்கும் வணிகத்தில் போட்டி வலுவடைந்தது. இடச்சுக்காரர்கள் ஆங்கிலேயர்கள் சிலரைத் தூக்கிலிட்டனர். இதன் காரணமாக வெகுண்டெழுந்த ஆங்கிலேயர்கள், இடச்சுக் காரர்களை இந்திய நாட்டில் வாணிகம் செய்யாத வாறு தடுத்தனர். ஆதலால், இடச்சுக்காரர்கள் கிழக்கிந்தியத் தீவுகளில் மட்டும் தம் வணிகத்தை வளப்படுத்தினர். அதன்பின், பிரெஞ்சுக்காரர்கள் ஆங்கிலேயருக்குப் போட்டியாக ஒரு வணிகக் குழு அமைத்து இந்தியாவில் வாணிபம் செய்தனர். பதினெட்டாம் நூற்றாண்டில் பிரெஞ்சுக் ஆளுநர் டூப்ளே என்பார் ஆங்கிலேயரின் வணிகத்தைத் தென்னிந்தியாவினின்றும் ஒழித்துவிட எண்ணினார். எண்ணிய எண்ணம் முற்றுப் பெறுவதற்கு முன்னர், கருநாடக நவாபாக விளங்கிய மகமது அலியுடன் வாரிசு காரணமாகத் தலையிட்டுப் பகையைத் தேடிக் கொண்டார். இதனால் மகமது அலி ஆங்கிலேயருடன் சேர்ந்து பிரெஞ்சுக்காரர்களைத் தொலைத்து விடத் திட்டமிட்டான். ஆங்கிலேயரும் நல்ல சமயம், படைத்தலைவனின் கீழ்ப் பெரும் படையை விடுத்தனர். போரில் பிரெஞ்சுக்காரருக்குத் தோல்வியே கிடைத்தது. பிரெஞ்சுக்காரர்களின் போட்டி ஒழிந்தது. இடச்சுக்காரர்களும் ஒடுக்கப் பட்டனர். நூற்றாண்டிலேதான். யாழ்ப்பாணத்திலும் இடச்சுக்காரர் ஆட்சி நீங்கி, ஆங்கில ஆட்சி தொடங்கியது. நாவலரின் முன்னோர்கள் டச்சுக் காரர் ஆட்சியிலே புகழ்பெற்று விளங்கினார்கள் என்பது வெளிப்படை. அவர்கள் ஆங்கில ஆட்சியில் எவ்வாறு வாழ்ந்தனர் என்பதும் அறிய வேண்டு மன்றோ?

நாவலரின் தந்தையார் கந்தப்பபிள்ளை, தம்மைப் போன்றே மக்களும் புலமை பெற வேண்டுமென்று கருதித் தம் கடமையைச் செய்வாரானார். “சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடன்” என்ற முதுமொழியறிந்தவரன்றோ? ஆண் மக்கள் ஐவருள் நால்வர்க்குத் தமிழ்க்கல்வியும் ஆங்கிலக் கல்வியும் ஒருசேரப்பெறுமாறு செய்தார். அந் நால்வரும் ஆங்கில அரசாங்கத்தில் அலுவல் பெற்றுச் சிறப்புற வாழ்ந்தனர். அரசாங்க அலுவலை மேற்கொண்ட போதிலும் தம் மொழி மறந்து வாழும் தன்மைய ரல்லர் அவர்களனைவரும் தாய்மொழியினிடத்து மிக்க அன்புடையவர்கள். அவருள் ஒருவர் இலக் கண இலக்கியங்களை முறைப்படி கற்றுப் புலவர் பட்டமும் பெற்றா ரெனின் அவர் தம் தாய் மொழிப் பற்றை என் னென்பது! கடைசி மகவாகிய நம் ஆறுமுக நாவலர் தந்தையால் மிக்க அன்பு பாராட்டப்பட்டவர். சிறு பருவத்திலேயே தமிழின்பால் வேட்கையுடையார் என்பது அவர் சொல்லிலும் எழுத்திலும் இடைவிடாது கவனம் செலுத்தி வந்தமையால் அறியலாம். பள்ளிப் பருவம் வந்ததும் யாழ்ப்பாண நல்லூரிலுள்ள சிறிய தமிழ்ப் பள்ளிக்குப் பயில விடுத்தனர். நீதி நூல்களையும், நிகண்டு முதலிய கருவி நூல்களையும் இளமையிற் கற்றார். உள்ளத்தமைத்து இளமையிற் கற்பது எழுபிறப்பும் தொடர்வதன்றோ? ஆகவே ஆசிரியர் கற்பித்தவற்றைச் செவி வாயாக, நெஞ்சு களனாக கொண்டு விடாது உள்ளத்தமைத்து தலை மாணவர் இலக்கணத்திற்குப் பொருந்த விளங்கினார். கல்வி ஆர்வத்தைக் கண்ட யாவரும் அன்றே வியந்தனர் என்பது பொய் யன்று. பின்வரும் நிகழ்ச்சி யொன்றே அதனை மெய்ப்பிக்கும்

# தென்னாட்டு நிகழ்வுகள்



செல்வன். ஜோதீஸ்வரன் லசிதன் அவர்களின் திருவடிப்பேற்று வழிபாடுகள் (16-01-2024)



தென்னாட்டில் மாட்டுப்பொங்கல் வழிபாடுகள் (16-01-2024)





மங்களநாதர் திருக்கோயில் திருவாசக முற்றோதல் (01-01-2024)




மார்கழித் திங்கள் இதழ் வெளியீடு கழுவாய் வழிபாடும் (24-12-2023)



மார்கழித் திங்கள் தேய்பிறை கழுவாய் வழிபாடுகள் (09-01-2024)



தென்னாட்டில் தைப்பொங்கல் வழிபாடுகள் (15-01-2024)



திருவாதிரை அருட்காட்சி வழிபாடும் திருவீதியுலாவும் (27-12-2023)

தென்னாடு செந்தமிழாகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் நாற்பத்து ஒன்றாவது திங்கள் செய்தியிதழ் “தென்னாடு”, சிவத்திரு.சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு சுறவம் நல்லோரை தைத் திங்கள் 11ம் நாள் அன்று (25 -01-2024 வியாழக்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி, தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம். சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் - HA/4/JA/343.

தொலைபேசி +94 21 222 9722 | புலனம் +94 (70) 770 1111| மின்னஞ்சல் thennavan@thennadu.org | fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org